Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION MONEY TRANSFER | SM | வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம் 20 நிமிட நேரத்தில் உங்கள்
கைகளில் பணம்கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 2223214
E-Mail: smskr@eureka.lk
சிவன்கோவில் வீதி, காரைநகர்.
T.P: 060 2212472
(சி/2201)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 24 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஜ் 15 (07.02.2004) சனிக்கிழமை இதழ் :129

# சுதந்திரக்கட்சி முக்கியஸ்தர்களின் கோரிக்கையை ஏற்றார் சந்திரிகா!

## நாடாளுமன்றம் எந்நேரமும் கலைக்கப்படலாம்

(கொழும்பு)

**நாடாளுமன்றத்தைக் கலைத்து, பொதுத்தேர்தலுக்கு அழைப்புவிடுமாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், தொகுதி அமைப்பாளர்களும் முன்வைத்த கோரிக்கையை - நீண்ட விவாதத்தின் பின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்றுக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. இதையடுத்து நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலுக்கான அறிவிப்பு எந்நேரமும் வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.**

நாட்டின் தற்போதைய அரசியல் நிலை தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. இந்தக் கூடடத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், தொகுதி அமைப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைப்பாளர்களும் நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன், பல்வேறு அரசியல் விவகாரங்கள் குறித்தும் சுதந்திரக்கட்சி பிரமுகர்கள் இந்தக் கூட்டத்தில் எடுத்துக் கூறினர்.

தற்போதைய அரசாங்கத்தின் அரசியல் பழிவாங்கல்கள், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

தமது கட்சிப் பிரமுகர்களின் இந்தக் கோரிகையை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அடுத்து நடைபெறும் தேர்தலில் புதிதாக அமைக்கப்பட்ட கூட்டணி வெற்றி பெறும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி சந்திரிகா - சுதந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழு தலைவர் பிரதமர் ரணிலை சந்தித்தார்!

(கொழும்பு)

கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ் கொவ்டே - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்று அலரிமாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே கிழக்கு மாகாணத்திற்கு விஜயம்

(கொழும்பு)

கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் றொன்ட் புறூவ் ஹொவ்டே நாளைமறுதினம் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஊழல்களை வெளிப்படுத்தும் ஆவணங்களை மறைக்கும் நடவடிக்கைகளில் அமைச்சர்கள்!

### மங்கள சமரவீர குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுத் தேர்தலொன்று நாட்டில் இடம் பெறுவதற்கான சமிக்ஞையினை சிறிலங்கா சுதந்திரக்கட்சி வெளியிட்டுள்ளது.

இந்தக் கட்சியின் சார்பில் அதன் பேச்சாளர் மங்கள சமரவீர இதுகுறித்துத் தெரிவிக்கையில்,

தற்போது தேர்தலொன்று நடைபெறவுள்ள நிலையில் முக்கிய அமைச்சர்கள் சிலர், முக்கிய ஆவணங்களை இடம்மாற்றி வருகின்றனர்.

இந்த அமைச்சர்கள் தங்களது ஊழல்கள் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தக்கூடிய முக்கிய ஆவணங்களையே தற்போது இடம் மாற்றிவருகின்றனர். எனவே இதற்கு அரசாங்க அலுவலகங்களில் பணிபுரியும் அதிகாரிகள்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமரின் ஆலோசகர் தலையீடு; உண்ணாவிரதம் கைவிடப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயங்களை நீக்கி தம்மை மீளவும் சொந்த இடங்களில் குடியமர்த்துமாறு கோரி மேற்கொள்ளப்பட்டுவந்த சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டங்கள் பிரதமரின் ஆலோசகர் வழங்கிய உறுதிமொழியை அடுத்து நேற்று தற்காலிமாக இடைநிறுத்தப்பட்டது.

இலங்கையின் 56 ஆவது சுதந்திர தினமான கடந்த 4 ஆம் திகதி முதல் வலி.வடக்கு மற்றும் தென்மராட்சிப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து வாழும் மக்களை உரிய இடங்களில் மீளக்குடியமர்த்துமாறுகோரி 13 பேர் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இவர்களில் வலி.வடக்கு பிரதேச செயலகம் முன்பாக 12 பேரும், தென்மராட்சி - சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் முன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய கூட்டணியை பதிவுசெய்ய ஆணையாளரிடம் விண்ணப்பம்!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பியும் இணைந்து உருவாக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வது தொடர்பான ஆவணங்கள் நேற்று தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

தமக்கு வண்ணத்துப்பூச்சி சின்னத்தை ஒதுக்கி தருமாறு தேர்தல் ஆணையாளரிடம் இந்தக் கூட்டணி கேட்டிருக்கிறது.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரான நந்தன குணதிலக இந்தப் புதிய கூட்டணியின் தலைவராகவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிறேம

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையை சேர்ந்த அறுவர் குழு ஆயுதங்களுடன் குவைத்தில் கைது!

ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் வைத்திருந்த இலங்கையைச் சேர்ந்த குழுவொன்றை, குவைத் நாட்டு குற்றத் தடுப்புப்பிரிவினர் கைதுசெய்திருப்பதாக அல் அன்பா என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

அந்தப் பத்திரிகை இது தொடர்பாக மேலும் தெரிவித்திருப்பதாவது,

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து, குவைத்திலுள்ள ஜப்றியா என்ற இடத்தில் வைத்து ஆறு பேர் அடங்கிய இலங்கையைச் சேர்ந்த குழு, ஏ.கே.47 மற்றும் வெடிபொருட்களுடன் கைதுசெய்யப்பட்டு பொலிஸாரினால் சிறையில் அடைக்கப்பட்டது.

இவர்களிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது, தாம் இலங்கையில் அரச படையினருக்கு எதிராக நடத்தப்படும் போராட்டத்திற்கு அனுப்பவே இந்த ஆயுதங்களை வைத்திருந்ததாக தெரிவித்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## படையினருடனான சந்திப்பில் புலிகள் பங்கேற்கவில்லை!

யாழ்.குடாநாட்டுப் படையதிகாரிகளுடன் நேற்று நடக்கவிருந்த சந்திப்பொன்றில் விடுதலைப் புலிகள் கலந்துகொள்ளமுடியாதென அறிவித்ததாக கண்காணிப்புக்குழுவின் பேச்சாளரான அக்னஸ் பிறகடோட்ரயர் தெரிவித்தார்.

நேற்றைய கூட்டத்தில் கலந்துகொள்ள நியமிக்கப்பட்டவர்கள் வேறொரு நிகழ்வில் பங்கேற்றதால் இச்சந்திப்பில் கலந்துகொள்வில்லையென விடுதலைப் புலிகள் - கண்காணிப்புக் குழுவிற்கு தெரியப்படுத்தியதாக அவர் மேலும் தெரிவித்தார். புலிகளின் இந்த அறிவிப்பால் கூட்டம் நிறுத்தப்பட்டது தொடர்பாக யாழ்.குடாநாட்டு கட்டளைத் தளபதி கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

## ஜேர்மன் இராஜாங்க செயலரை தமிழ்ச்செல்வன் குழு சந்திப்பு!

(பேர்ளின்)

ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் ஜேர்மன் சென்று அந்த நாட்டின் பல முக்கிய அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடினர்.

அந்த நாட்டின் இராஜாங்கச் செயலர் எரிக் ஸ்ரேற்கெர், பொருளாதார மற்றும் அபிவிருத்தி அமைச்சை சேர்ந்த ஹேரஸ்ரின் முல்லர், வெளிவிவகார அமைச்சின் உதவிச் செயலர், வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து கலந்துரையாடினர்.

போர்நிறுத்தம் அமுலுக்கு வந்து இரண்டு வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் மக்களுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகள் கூட இன்னமும் அமுல்படுத்தவில்லை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான அதிகார முரண்பாடு இருக்கும் வரை மக்களுக்கான அடிப்படை மனிதாபிமான தேவைகள் முன்னெடுக்கப்படமாட்டாது. எனவே, சர்வதேச சமுகம் தற்காலிகமாகவேனும் அடிப்படை பிரச்சினைகளைத் தீர்க்க உதவவேண்டும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வே அரசு விலகியதான தகவல்கள் உண்மையில்லை!

### எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

(ஒஸ்லோ)

இலங்கையின் சமாதான முயற்சிகளின் அனுசரணையாளர்களாக ஈடுபட்டுள்ள நோர்வே அதிலிருந்து விலகவில்லை எனவும், இந்த சமாதான முயற்சிகள் மேலும் வலுவான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இலங்கையின் சுதந்திர தின வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

இலங்கையிலுள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் அந்நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சமாதான வழியில் தீர்வுகாண்பதையே வலியுறுத்தியுள்ளன.

இலங்கையின சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வே அரசாங்கம் விலகுவதற்கு ஆலோசித்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
ail :-jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியமையே உண்ணா நோன்பிருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டோம்!

## கூட்டமைப்பினரிடம் பொதுமக்கள் உள்ளக்குமுறல்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் காலங்களில் கொடுக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசியல்வாதிகள் தவறியதாலேயே நமக்கு இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளது என பொதுமகன் ஒருவர் தெரிவித்தார்.

வலி.வடக்கு பிரதேச செயலகத்தை இயங்கவிடாது தடுத்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த மக்களின் போராட்டத்தை நிறுத்திவைத்து, உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, எம்.கே.சிவாஜிலிங்கம், என்.ரவிராஜ் ஆகியோரிடம் ஓர் பொதுமகன் கருத்து தெரிவித்தபோதே இவ்வாறு கூறினார்.

இந்தக் கருத்தை வலியுறுத்தி பல பொதுமக்களும் தமது உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்திக் கண்ணீர் மல்க தமது நிலைப்பாட்டை அவர்களுக்கு எடுத்துக்கூறினர். அவர்கள் அங்கு தெரிவிக்கையில்,

அரசியல் தேவைகளுக்காக மட்டும் மக்களிடம் வரும் நிலையை அரசியல்வாதிகள் மாற்றுதல் வேண்டும். எமக்கு வழங்கும் உறுதி மொழிகளைக்காப்பாற்றிக்கொள்வதற்கு எந்தவொரு முயற்சியையும் அவர்கள் எடுக்காமல் இருப்பது அவர்கள்மீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இன்றுகூட, உண்ணாநோன்பைக் கைவிடுவதே தற்போதைய அரசியல் சூழ்நிலைக்கும் பொருத்தமானது என்று தெரிவித்து இந்தப்போராட்டத்தை இடைநிறுத்தச் செய்துள்ளனர். நாளை ஓர் அரசியல் குழப்பம் வந்தால், அவர்கள் ஓடி ஒளித்துக் கொள்வர்கள். நாம்தான் அல்லற்பட வேண்டும்.

கொடுக்கும் வாக்குறுதிகளைச் சரிவரக் காப்பாற்ற உரிய நவடிக்கை எடுக்கத் தவறியதனால்தான் இந்த உண்ணா நோன்பை மக்கள் முன்னெடுக்க நேர்ந்தது.

இன்று அவர்கள் அடுத்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்படும் போது, தாமும் உண்ணாவிரதம் இருக்க எம்முடன் வருவதாக தெரிவிக்கின்றனர். இன்று அரசியல் அதிகாரம் இல்லை எனக்கூறும் இவர்கள், நாளை வேறு காரணத்தைக்கூறித் நழுவிவிடலாம். அரசியல்வாதிகள் கொடுத்த வாக்குறுதியைக் கப்பாற்றுவது குறைவு என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

எவ்வாறாயினும் தொடர்ந்து பிரச்சினையையும், அவலத்தையும் சந்திப்பது நாம்தான் எமது துன்பதுயரங்களை யார்தான் நீக்குவார்கள்? என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

### விளையாட்டுக்கழக நிர்வாகிகள் தெரிவு

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக பொதுக்கூட்டம் சமீபத்தில் நடைபெற்றபோது, கீழ்க்கண்டவர்கள் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக அ.யேசுதாசன், உபதலைவர்களாக எஸ்.ஜெயசீலன், செ. மனோகரன், செயலாளர்களாக அ. பெனடிக்ராதா, இ.திலக், பொருளாளராக பி.பிரியந்தா ஆகியோரும்,

நிர்வாகசபை உறுப்பினர்களாக ம.எட்மன் கனீசியஸ், த.லவன் பீற்றர், யோ.டார்வின், செ.அமல்ராஜ், பி. எமில்ராஜ், அ.ஜஸ்ரின், த.சுரேஷ், கி.டன்சன், அ.சாந்தன், யோ.லக்ஸ்மன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (206)

# வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர்களுக்கு நிகொட் 300 லட்சம் ரூபா கடனுதவி!

வடமராட்சி வடக்கு - வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசங்களில் அங்கம் வகிக்கும் 18 சங்கங்களின் அங்கத்தவர்கள் சுழற்சி முறையில் கடன் பெற்று மீன்பிடி உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக 300 லட்சம் ரூபாவை நிகொட் வழங்கவுள்ளது. இந்த நிதியில் முதற்தடவையாக 90 கண்ணாடி நார் இழைப்படகுகளும், 210 கட்டுமரங்களும், 135 வெளியிணைப்பு இயந்திரங்களும், 55 லட்சம் பெறுமதியான வலைகள், முதலியவற்றைக் கொள்வனவு செய்ய இந்தநிதி உபயோகப்படும்.

இத்திட்டத்தின் மூலமாக 4664 கடற்றொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த 3006 அங்கத்தவர்கள் பயன் பெறுகிறார்கள். யுத்தத்தின் காரணமாக 728 கண்ணாடி நாரிழைப்படகுகளும், 60 வள்ளங்களும், 1123 கட்டுமரங்களும், பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதிவாய்ந்த வலைகளும் அழிந்து போயுள்ளதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் ஒரு பகுதியை மீளவும் தொழிலாளர் பெற்றுக் கொள்வதே இத்திட்த்தின் நோக்கமாகும்.

கடன் வழங்கும் திட்டத்தை சிறந்த முறையில் செயற்படுத்துவதற்கு வேண் டிய ஆலோசனைகளையும், பயிற்சிகளையும் வழங்குவதோடு திட்ட அமுலாக்கத்திலும் கண்காணிப்பிலும் நிகொட் பங்குபற்றவுள்ளது.

இதற்குரிய செலவாக 48 லட்சம் ரூபாவை 'நிகொட்' நிறுவனம் 'யு.என்.டி.பி'க்கு வழங்கும். இந்த 48 இலட்சம் ரூபாவையும் நெதர்லாந்து அரசாங்கம் 'நிகொட்' திட்டத்திற்கு நன்கொடையாக வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்திட்டத்தின் அமுலாக்கத்தில் யாழ்.மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளரும், யாழ்.மாவட்ட கடற்றொழில் உதவி ஆணையாளரும் பங்குபற்றுவார்கள்.

இந்தச் சுழற்சி முறைக் கடன் வழங்கும் திட்டத்தின் ஆரம்ப வைபவம் இன்று மருதங்கேணியில் நடைபெறும். இவ்வைபவத்தில் 'நிகொட்' திட்டப் பணிப்பாளர் த.லங்காநேசன், வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.இரங்கராஜா யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் 'நிகொட்' திட்டத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர்கள் என்.புகேந்திரன், க.நவரத்தினராசா, மருதங்கேணி உதவி அரசஅதிபர் வேலாயுத பிள்ளை ஆகியோருடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜோன கூன், திட்ட ஆலோசகர் எம்.திருச்செல்வம், நெதர்லாந்து தூதரக முதலாவது செயலாளர் ஜோன் ஹஸ் கன்,யு.என்.டி.பி யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் திருமதி. ஞானசிவபாதசுந்தரம், முன்னாள் யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, 'ஜி.ரி.இசற்' ஸ்தாபனத்தின் 'நிகொட்' இணைப்பாளர் ஆகியோரும் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்வர்.

## ஒலிப்பேழை வெளியீட்டு விழா





யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில்இடம்பெற்ற ஒலிப்பேழை வெளியீட்டு நிகழ்வில் புலிகளின் குரல் பொறுப்பாளர் ந.தமிழன்பன் தேசியக் கொடி ஏற்றுவதை முதற்படத்திலும், ஒலிப்பேழையை நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒருவருக்கு வழங்குவதையும் காணலாம்.

# தியாகத்துக்கு ஈடாகிய தீர்வையே நாம் வலியுறுத்தி வருகிறோம்!

## ஒலிப்பேழை வெளியீட்டுரையில் புதுவை இரத்தினதுரை



(யாழ்ப்பாணம்)

போராட்ட வாழ்வின் தியாகத்திற்கு ஈடான சுதந்திரத் தீர்வையே நாம் வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு நேற்றையதினம் பல்கலைக்கழகத்தில் தர்மேந்திரா கலையகத்தினரின் ஒலிப்பேழைகள் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துரை வழங்குகையில் -

இலங்கையில் பல வருடங்களுக்கு முன்பும் ஒலிப்பேழைகள் பல தோற்றம் பெற்றன. இருப்பினும், எமது அமைப்பினால் 1990 ஆம் ஆண்டு முதல் ஒலிப்பாடல் தொகுப்பான 'இந்தமண் எங்கள் சொந்த மண்' வெளியாகியது. தற்போது கிட்டதட்ட 120 இற்கும் மேற்பட்ட ஒலிப்பாடல் தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது. ஒலிப்பாடல் தொகுப்பு வெளியிடுவது விடுதலைக்காக மட்டுமல்ல இசையை வளர்ப்பதற்காகவும் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

நாம் ஓர் அமைப்பல்ல அரசு, எனவே - இசைத்துறையில் உயர வேண்டும். பாடுபவர்கள் பாடகன் அல்ல. கவிதை எழுதுபவன் கவிஞன் அல்ல, வாழ்க்கையிலே கலையைத் தன்னகத்தே நிறைத்துக் கொண்டிருப்பவன்தான் கலைஞன். தற்போது இசைத்துறையில் சிங்களக்கலைஞர்கள் பலர் உருவாகிவிட்டனர். அவர்களுக்கு ஈடாக எமது கலைஞர்களும் வளர்ந்துள்ளனர்.

இந்தியாவில் இருந்து ஒலிபரப்பாகும் சின்னத்திரை கதைகள் எமது பிரதேசமக்களின் கலாசாரத்தை சீரழிக்கின்றன. எமது சமூகம் அழிகின்றது. சிதைந்து கொண்டு செல்கின்றது. இந்த நெருப்பாற்றை நாம் நீந்திக்கடக்கவேண்டும்.

யாரும் எதையும் தருவார்கள் என எண்ணுவதை விட, நாம் என்ன செய்ய வேண்டும்? என்ன தீர்வைப் பெறவேண்டும் என தீர்மானிக்க வேண்டும். சிதைகின்ற எதிர்கால சமூகத்தை பாதுகாக்க வேண்டும்.

எமது போராட்டத்திற்காக இழந்த உயிர்களுக்கு பெறுமதி கிடையாது. எனினும், அவர்களது ஈகத்தை மதிக்கும் படியான தீர்வையே நாம் எதிர்பார்க்கின்றோம். எமது வாழ்வு இனிமையானது அதனை நாம் அனுபவிக்கக்கூடிய தீர்வையே நாம் விரும்புகிறோம். எத்தனை காலமாக, எத்தனை மக்கள் தமது கனவுகளை உள்ளத்தில் சுமக்கின்றனர் அதனை இழந்து அடக்கு முறைக்குட்பட்ட தீர்வை நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம்.

போராட்டத்தின் வளர்ச்சிக்கட்டத்தில் சிறுசிறுதவறுகள் இருக்கத்தான் செய்யும் இதற்காக இன உணர்வை இழக்கும் துரோகத்தில் ஈடுபடமுடியுமா? எமது இனம்தான் அப்படிச் சிந்திக்குமா?

வரி அறவிடுகிறார்கள், மறியல் செய்கிறார்கள் என்று எண்ணிப் பிரகாசமிக்க சுந்திரவாழ்வை, இன உணர்வுமிக்க தியாகம் நிறைந்த பாதையை மறந்து இழந்து விடக் கூடாது.

சமாதானப் பேச்சுக்கள் தொடரட்டும் எமது உரிமைகள் கிடைக்கும்வரை பேசுவோம், அது வன்முறை மூலம் அடக்கப்பட நினைத்தால், அதற்கும் தகுந்த பலம், பதில் எம்மிடம் உண்டு என அவர் மேலும் தெரிவித்தார்.





வலி.வடக்கில் உண்ணாவிரதத்தை முடித்துவைப்பதற்கு முன்னர், கூட்டமைப்பு எம்.பிக்களான சிவாஜிலிங்கம், ரவிராஜ், மாவை.சேனாதிராசா, பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதையும், மாவை.சேனாதிராசா நீராகாரம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்துவைப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்..





படங்கள் : கஜீவன்

சாவகச்சேரியில் பிரதேச செயலகம் முன்நடைபெற்ற உண்ணாவிரதி ஒருவரின் உடல் நிலையைப் பரிசோதிப்பதை பிரதமரின் ஆலோசகர் பார்வையிடுவதை முதற்படத்திலும், பொதுமக்களின் பிரதிநிதிகளைச் சந்திப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.


நிறஞ்சனாஸ் சங்கானை

சிம்பு, சர்மி நடித்த

காதல் அழிவதில்லை

காட்சி நேரம்:11.00, 2.45, 6.00, (பு.நே.)

ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

HULK

(சி-2196)

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும்

ஒரே தின வெளியீடு

பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா

நடித்த

ஜெய்

காட்சிநேரம் :

10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-2197)

THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆண்டு 1இல் இருந்து 11 வரை எல்லாப் பாடங்களும்,

GRAMMAR, SPOKEN ENGLISH மேற்படிப்பு வரை

பதிவுக்கு:- அதிபர்

426(302), K.K.S வீதி,

யாழ்ப்பாணம். (588)

யசோ இறபர் ஸ்டாம்

75/=

பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே

யசோ (PVT) லிமிட்டட்,

35, கன்னாதிட்டி வீதி,

யாழ்ப்பாணம். (சி/2152)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் எந்தவொரு அமைப்புக்கும் நாம் ஆதரவு

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் எந்தவொரு உறுப்பினருக்கும் - சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்கும் என்று அதன் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முன்வரும் தரப்பினருக்கும் தமது ஆதரவு வழங்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அடுத்த சில மணி நேரங்களிலோ, நாட்களிலோ தேர்தல் ஒன்று அறிவிக்கப்படலாம் என்ற நிலையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், அடுத்த ஒரு தேர்தல் நடைபெற்றால் தொங்கு நாடாளுமன்றம் ஒன்று ஆட்சியில் இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

இதற்கு முன்னர் நடந்து முடிந்த தேர்தல்கள் இதனை பறைசாற்றியுள்ளதால் - மீண்டும், மீண்டும் தேர்தல்கள் நடத்தும்போது இதேநிலை ஏற்படும் என்று அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

# போதைப் பொருள் கடத்திய இந்தியப் பெண்மணி கைது!

கட்டுநாயக்க விமான நிலையத்தில் - போதைப்பொருள் கடத்திய இந்தியபெண் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் மாலை இலங்கைக்கு வந்த இந்தியப் பெண்ணிடமே 13 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டது.

ஒரு வருடத்தில் ஒரு கோடிக்கும் அதிகமான போதைப்பொருட்கள், ஒரு மாதத்தில் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு எடுத்துவரப்பட்டு, பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்படுகின்றன. கண்டுபிடிப்பவர்களை - போதைப்பொருள் தடுப்புச் சட்டத்தின் கீழ் நிறுத்தி, விசாரணைகள் மேற்கொள்ள்ப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இரு புலி உறுப்பினர்களை கைது செய்வதற்கு முயற்சி

## வவுனியாவில் சம்பவம்

வன்னியிலிருந்து வவுனியாவுக்குச் சென்ற விடுதலைப் புலிகள் இருவரைத் தடுத்து, கைதுசெய்யப் படையினர் முயன்றதாகத் தெரிய வருகிறது.

நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் இருவர் வன்னியிலிருந்து சென்றபோது, ஓமந்தையில் வைத்து படையினர் இவர்களைத் தடுத்து நிறுத்தி கைதுசெய்யுமாறு தமக்கு உயர்பீடத்தில் இருந்து உத்தரவு வந்துள்ளதாகவும், அதன்படி கைது செய்யப்போவதாகவும் படையினர் தெரிவித்தனர்.

இதன்பின், இந்த விடயம் கண்காணிப்புக் குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டது. கண்காணிப்புக் குழுவினர் இந்த விடயம் தொடர்பாகப் பேசி முடிவெடுக்கவேண்டும் என்றும், படையினர் தமது கட்டளையைத் தற்காலிகமாக விலக்கிப் போராளிகளைப் பயணிக்க அனுமதிக்குமாறு இராணுவத்தினரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதன்பின்னர் நேற்று முன்தினம் 5.30 மணிக்குப் பின்னர், போராளிகள் வவுனியாவுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். இந்த சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு அறிவித்துள்ளனர்.

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண தமிழ்க்கட்சிகள் இணையவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு

(கொழும்பு)

ஜே.வி.பியுடன் ஜனாதிபதி கூட்டுச் சேர்ந்தநிலையில், தமிழ்க் கட்சிகள் அவருடன் இணைவது என்பது கேள்விக்குறியாகும் என்று - நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும், தெரிவிக்கையில்- ஜனாதிபதி நினைத்திருந்தால் அவருடைய கட்சி ஆட்சியில் இருக்கும் போது, தமிழ்க்கட்சிகளைக் கூட்டிணைத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை எட்டியிருக்கமுடியும்.

இனப்பிரச்சினையைத தீர்ப்பதற்காக அனைத்து தமிழ்கட்சிகளையும் நேசக்கரம் நீட்டவேண்டுமென்று, ஜனாதிபதி அழைப்பு விடுப்பது உண்மையாக இருக்காது. 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதியுடன் நாங்கள் இருந்த காலத்தில், தமிழர்களை அவர் கைவிட்டுள்ளார்.

ஆகவே, ஜனாதிபதி, ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்த பின்னர், தமிழ்க் கட்சிகள் அவருடன் ஒன்று சேருவதென்பது கேள்விக்குறியாகும். தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமிழ்கட்சிகள் ஒன்றிணையாலாமே தவிர, தமிழ்க்கட்சிகள் ஜனாதிபதியுடன் ஒன்றிணைவது நம்பக்கூடிய விடயமல்ல.

விடுதலைப் புலிகள் மீண்டும் பேச்சுவார்த்தையினை ஆரம்பிக்கும் பொருட்டு, இடைக்கால நிர்வாகத் திட்டத்தை முன்வைத்தநேரத்தில், பிரதமர் நாட்டில் இல்லாதபோது, மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்று, சமாதானப் பேச்சுவார்த்தையினை ஜனாதிபதி நிர்க்கதியாக்கினர் என்று, நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதியின் நேசக்கர அழைப்பு தமிழரின் உரிமைக்குரலை நசுக்கும்

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

ஜனாதிபதியின் நேசக்கர அழைப்பு - தமிழ் மக்களின் உரிமைக் குரல்வளையை நசுக்குவதற்கான பலத்தை தேடுவதற்கான உபாயம் என, ரெலோ அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தனது நேசக்கரத்தை நீட்டி, அனைத்து கட்சிகளும் இணைய வேண்டும் என கேட்டுக்கொண்டார். நாங்கள் ஜனாதிபதியுடன் இணைந்து இருந்தபோது, ஜனாதிபதியை தமிழ் மக்கள் நம்பியபோது, ஜனாதிபதி கைவிட்டவர்.

ஆனால், தற்போது ஜனாதிபதி ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்ததால், எமது கைகளை முறித்துவிடுவார் என கடந்தகால செயற்பாடுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஜனாதிபதி நினைத்திருந்தால் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைத்திருக்கலாம். ஆனால், அவர் இவ்வாறு செயற்படவில்லை. விடுதலைப்புலிகள் இடைக்கால வரைவை கொடுத்த பின்பு மூன்று அமைச்சுகளையும் பறித்து, இலங்கையில் அரசியல் குழப்பத்தை ஏற்படுத்திய ஜனாதிபதியை எவ்வாறு நம்புவது எனவும் அவர் கருத்து தெரிவித்தார்.

# இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு கட்சித் தலைவர்கள் இணக்கம்

## அமைச்சர் இம்தியாஸ் தெரிவிப்பு

தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக, பிரதான அரசியற் கட்சிகளின் தலைவர்கள் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாக, தொலைத்தொடர்பு அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.

கலகெதரையில் தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் நாட்டின் பிரதான இரு கட்சிகளின் இரு தலைவர்களும், ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளமை முன்பு ஒருபோதும் இடம்பெறவில்லை.

கொள்கை உடன்பாடு ஒன்றுக்கு இந்த இரு தலைவர்களும் வந்துள்ளமை சிக்கலுக்கு உள்ளாகாமல் அதன் உச்சப் பயனைப் பெற்றுக்கொள்வது சகல இன மக்களின் பொறுப்பாகும்.

இந்த இணக்கப்பாடானது, தேசிய நெருக்கடியின்போது, நாட்டை மீட்டு எடுப்பதற்காகத் தோன்றியுள்ள சந்தர்ப்பமாகும்.

இந்த இணக்கப்பாட்டை நாட்டிலுள்ள சகல பிரஜைகளும் மதிக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# முஸ்லிம் காங்கிரஸின் வழக்கு விசாரணை 12 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றில்!

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவ இழுபறி தொடர்பான வழக்கு - எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. முஸ்லிம் காங்கிரஸின் மர சின்னம் யாருக்கு உரித்துடையது என்பது குறித்து, இந்த விசாரணையின்போது தீர்மானிக்கப்படும். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தாக்கல் செய்துள்ள வழக்கும், அமைச்சர் அதாவுல்லா தாக்கல் செய்துள்ள வழக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றில் சுற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

நாடாளுமன்றம் 12 ஆம் திகதிக்கு முன் கலைக்கப்பட்டால், முஸ்லிம் காங்கிரஸ் சின்னம் யாருக்கு வழங்கவேண்டும் என்பதைத் தேர்தல் ஆணையாளர் இருபக்க நியாயங்களைக் கேட்டறிந்து கொண்டபின் அறிவிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பொதுத் தேர்தல் குறித்து அஷ்ரப் காங்கிரஸின் தலைவர் சுபைர்தீனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது - முஸ்லிம் மக்களின் பலத்தை நாட்டிற்கு எடுத்துக்காட்ட வேண்டும் என்பதற்காக, முஸ்லிம் கூட்டணியொன்றை ஏற்படுத்த நாம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். அந்த முயற்சிக்குப் பலன் கிடைக்காவிட்டால், நாட்டிலுள்ள தேசிய கட்சிகளில் எந்தக்கட்சி சிறுபான்மை மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்கிறதோ? அந்தக் கட்சியுடன் சேர்ந்து போட்டியிடுவோம். அந்த முயற்சியும் கைகூடாவிட்டால், சுயேட்சையாகப் போட்யிடுவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

# ரயில்வே ஊழியர்களின் போராட்டம் 11 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது

(கொழும்பு)

ரயில்வே ஊழியர்களின் போராட்டம் நேற்றும் 11 ஆவது நாளாக தொடர்ந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

ரயில்வேயை அதிகார உடைமையாக மாற்றுகின்ற அரசின் முடிவை எதிர்த்தே, ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபடுகின்றார்கள்.

இரு தரப்பிலும் விட்டுக்கொடுப்பு எதுவும் இன்றி காணப்படுவதனால், போராட்டம் தொடர்வதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, போக்குவரத்து அமைச்சையும் ஜனாதிபதி பொறுப்பேற்க வேண்டும் என்ற கோரிக்கையும் வலுப்பெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ரயில்வே ஊழியர்களின் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தால், ரயில் பயணிகள் பெரிதும் பாதிப்படைந்துவருகிறார்கள்.

எனினும், அதிகாரசபை இயலுமான அளவில் பயணிகள் சேவைகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (01)

## வடக்கு - கிழக்கில்

# பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் ஐரோப்பிய ஆணைக்குழு அக்கறை

வடக்கு - கிழக்கில் யுத்தத்தினால் அழிந்துபோயுள்ள பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமென்பதில், ஐரோப்பிய ஆணைக்குழு அதிக அக்கறை கொண்டுள்ளதாக - ஐரோப்பிய ஆணைக்குழுவின் இலங்கைக்கான பிரதிநிதி போஜா மிகுலெஸ் தெரிவித்தார்.

திருக்கோயில் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்படி கருத்தை ஐரோப்பிய பிரதிநிதி தெரிவித்தார்.

இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி, நிரந்தர சமாதானத்தை உருவாக்க வேண்டும் எனவும் அவர் விருப்பம் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஆணைக்குழு யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களின் புனரமைப்புப் பணிகளுக்கு உதவி வழங்கி வருகின்றது.

இந்த வகையில், மீள்குடியேற்றக் கிராமங்களில் மேற்கொள்ளப்படும் புனரமைப்பு அபிவிருத்திப் பணிகளைப் பார்வையிடுவதற்காக இலங்கைக்கு விஜயம் செய்தபோதே, இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

நிரந்தர சமாதானம் உருவாகும் போதுதான், அபிவிருத்திப் பணிகளின் பலன்கள் மக்களை சென்றடையும். தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்புக்களால் சமாதான முயற்சிகள் சீர்குலைந்திருக்கின்றன.

இவை விரைவில் தீர்வுக்கு வந்துவிடும் என நாம் நம்புகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, வீதி புனரமைப்பு, வீடமைப்புத் திட்டம், விவசாய கிணறுகள், மலசலகூட வசதிகள் நெல் குற்றும் ஆலை, வைத்தியசாலை என்பவற்றை அபிவிருத்திசெய்ய, ஐரோப்பிய ஆணைக்குழு உதவிக்ளை வழங்குவதற்கு முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

# கும்பாபிஷேகம்

(வண்ணை)

வண்ணை கோடையம்பதி சிவசுப்பிரமணியத் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக நிகழ்வுகள் - நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 6.55 மணிமுதல் நடைபெறவுள்ளது.

நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூஜை இடம்பெற்று இரவு 8 மணிக்கு வசந்தமண்டப பூசையும் இடம்பெறவுள்ளது. இரவு 7 மணிக்கு குமரேசன் பாலசண்முக இராமாயண விரிவுரையும் இடம்பெறும்.

# அவுஸ்ரேலியா 7விக்கெட்டுக்களால் இந்தியாவைத் தோற்கடித்தது!



வி.பி கிண்ணத் தொடருக்காக அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுவரும் முத்தரப்பு போட்டியன் இறுதி மூன்று போட்டிகளுக்காக நேற்று மெல்போர்னில் நடைபெற்ற இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையேயான முதலாவது போட்டியில் அவுஸ்ரேலியா 7 விக்கட்டுக்கalால் இந்தியாவைத் தோற்கடித்தது.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் ஆடிய இந்தியத் துடுப்பாட்டவீரர்கள் அவுஸ்ரேலிய வீரர்களின் பந்துவீச்சுக்கு முகம் கொடுத்து ஓட்டம் எடுக்க முடியாமல் திணறினர்.

இந்திய அணி 49 ஓவர்களில் அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 222 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இதில் அகர்கர் 53, ஹேமாங் பதானி ஆட்டமிழக்காமல் 60, லக்ஷ்மன் 24, யுவராஜ் சிங் 21, இர்பான்பதான் 19 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர்.

இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரங்களான சச்சின் 08, ஷேவாக் 03, ராவிட் 12, அணித்தலைவர் கங்கூலி 06 ஓட்டங்களைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

பந்து வீச்சில் ஜிலெஸ்பி, பிரட்லி,ஹாவி மூவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், வில்லியம்ஸ், கிளார்க் இருவரும் தலா ஒவ்வொரு விக்கட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலியா 40.1 ஓவரில் 3 விக்கட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் கில்கிறிஸ்ட் 20 பந்துகளில் 38 ஓட்டங்களையும், ஹைடன் 50 ஓட்டங்களையும், அணித்தலைவர் பொண்டிங் 80 பந்துகளில் 88 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். மார்ட்டின் 20, சைமன்ட்ஸ் 10 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



பந்து வீச்சில் பாலாஜி மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார். இந்த மூன்று போட்டிகள் கொண்ட தொடரின் இரண்டாவது போட்டி நாளை சிட்னியில் பகல் இரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது.

## ஸ்ரான்லி கல்லூரி அணியை சென்ஜோன்ஸ் அணி வென்றது.

யாழ்.மாவட்ட பாடசாலைகள் இடையே நடைபெற்றுவருகின்ற கிரிக்கெட்போட்டித் தொடரில் கடந்த வாரம் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சென்ஜோன்ஸ் கல்லூரி அணி ஸ்ரான்லி கல்லூரி அணியினை வெற்றி கொண்டது.

இந்தப் போட்டியின் ஓட்ட எண்ணிக்கை விபரம் வருமாறு.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ஜோன்ஸ் கல்லூரி அணி சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டினேஷ் 46 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். ஸ்ரான்லி கல்லூரி அணிவீரர் ரஜீவ்காந் 48 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், கஜதீபன் 35 ஓட்டங்களுக்கு 3 விக்கெடடுக்களையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி கல்லூரி அணியினர் 64 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்தனர். இதில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணிவீரர் மயூரன் 34 ஓட்டங்களைக் கொடுத்து 8 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து, இரண்டாவது இனிங்ஸை ஆடிய சென்ஜோன்ஸ் கல்லூரி அணி 2 விக்கெட் இழப்பிற்கு 156 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இதில் அன்புஜன் 68 ஓட்டங்களையும், நிருபன் 59 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

தொடர்ந்து 246 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி பெறலாம் என ஆடிய ஸ்ரான்லி கல்லூரி அணியினர் 48 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தமையால் 197 ஓட்டங்களால் சென்ஜோன்ஸ் கல்லூரி அணி இந்தப் போட்டியில் வெற்றி பெற்றுக் கொண்டது.

இரண்டாவது இனிங்ஸிலும் சென்ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர் மயூரன் 17 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (58)

## சென்ஜோன்ஸ் கல்லூரி இனிங்ஸால் யூனியன் கல்லூரியை வென்றது!

யாழ்.மாவட்ட பாடசாலைகளிடையே நடைபெற்றுவரும் கிரிக்கெட் போட்டித் தொடரில் கடந்தவாரம் சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் சென்ஜோன்ஸ் கல்லூரி அணி - யூனியன் கல்லூரி அணியினை இன்னிங்ஸால் வெற்றி கொண்டது.

இந்தப் போட்டியின் ஓட்டஎண்ணிக்கை விபரம் வருமாறு,

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ஜோன்ஸ் கல்லூரி அணியினர் 5 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 262 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டனர. இதில் அன்புஜன் 77 ஓட்டங்களையும், கிருஸ்ணகுமார் ஆட்டமிழக்காமல் 112 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 114 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. இதில் யூனியன் கல்லூரி அணி வீரர் மயூரன் 45 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். சென்ஜோன்ஸ் அணியின் சார்பாக அன்ரூ 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து, இரண்டாவது இனிங்ஸை ஆடிய யூனியன் கல்லூரி அணி 110 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. யூனியன் கல்லரி அணி வீரர் மயூரன் இரண்டாவது இன்னிங்ஸிலும் 33 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். சென்ஜோன்ஸ் அணி சார்பாக கிருஸ்ணகுமார் 5 விக்கெட்டுக்களையும், மதன்ராஜ் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

யூனியன் கல்லூரி முதல் இனிங்ஸில் 114 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்ஸில் 110 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால் இனிங்ஸாலும், 38 ஓட்டங்களாலும் சென்ஜோன்ஸ் கல்லூரி அணி இந்தப் போட்டியில் வெற்றி பெற்றது. (58)

## இந்திய-பாகிஸ்தான் டெஸ்ட்; மார்ச் 11 இல் ஆரம்பமாகும்!

இந்திய கிரிக்கெட் அணி மார்ச், ஏப்ரல் மாதங்களில் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து விளையாடத் திட்டமிட்டிருந்தது.

இந்திய அணியின் பாகிஸ்தான் சுற்றுப்பயணத் திகதி விபரம் இன்னும் அறிவிக்கப்படாமல் உள்ளது. ஆனால், இந்திய அணி பாகிஸ்தானில் விளையாட இருக்கும் போட்டி விபரம் குறித்து அவுஸ்ரேலியாவில் இருக்கும் இந்திய அணிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் சபை சுற்றுப்பயண திகதி விபரத்தை இந்திய அணி நிர்வாகத்துக்கு அனுப்பியிருக்கிறது. இந்திய அணி பாகிஸ்தானுடன் 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போடடி அல்லது 7 ஒரு நாள் போட்டிகளில் ஆடவுள்ளது. முதல் டெஸ்ட் போட்டி அடுத்த மாதம் 11-15 ஆம் திகதி வரையும், இரண்டாவது டெஸ்ட் போட்டி 19- 23 ஆம் திகதி வரையும் கடைசி டெஸ்ட் போட்டி 27-31 ஆம் திகதி வரையும் நடைபெறும்.

ஒருநாள் போட்டி நடைபெறும் திகதி மற்றும் போட்டி நடைபெறும் இடங்கள் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இந்திய அணி 15 ஆண்டு இடைவேளைக்குப் பிறகு பாகிஸ்தான் சென்று டெஸ்டில் விளையாடுகிறது. இதற்கு முன்பு 1989 ஆம் ஆண்டு ஸ்ரீகாந்த் தலைமையில் பாகிஸ்தான் சென்று விளையாடியது குறிப்பிடத்தக்கது.

## சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் மென்பந்து, கரப்பந்தாட்ட போட்டிகள்

யாழ்.புனித சாள்ஸ் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகளின் ஓர் அங்கமாக மென்பந்து கிரிக்கெட் மற்றும் கரப்பநதாட்டப் போட்டிகள், இல்லங்களுக்கிடையில் லீக் முறையில் நடைபெற்றுவருகின்றது.

இந்தப் போட்டிகள் 17 வயதிற்குட்பட்ட கீழ்ப் பிரிவு, 17 வயதிற்கு மேற்பட்ட பிரிவு என இருபிரிவுகளாக நடைபெற்று வருகின்றன.

மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதி 17 வயதிற்குட்பட்ட சுற்றுப்போட்டிக்கு ஞானப்பிரகாசர் இல்லமும், வீரமா முனிவர் இல்லமும் தகுதி பெற்றுள்ளன.

17 வயதிற்கு மேற்பட்ட போட்டிக்கு தனிநாயகம் இல்லமும், ஞானப்பிரகாசர் இல்லமும் தகுதி பெற்றுள்ளன. இல்லங்களுக்கிடையிலான கரப்பந்தாட்ட போட்டிகள் திங்கட்கிழமை நடைபெறவுள்ளன. மேற்படி வித்தியாலய மெய்வல்லுநர் போட்டியில் இந்தவருடம் முதல் வீதியோட்டப் போடடிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த வீதியோட்டப்போட்டி 18 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (58)

## விளையாட்டு

# வேலூர் சிறையிலிருந்து வைகோ இன்று விடுதலை

வேலூர் சிறையிலிருந்து ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ இன்று விடுதலையாகின்றார்.இந்த நிலையில் அவருக்கு உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டதால் நேற்று பொடா வழக்கில் பிணைபெற பூந்தமல்லி நீதிமன்றத்துக்கு வரமுடியவில்லை.

நேற்று நீதிமன்றம் வந்தபோதே, வைகோ வாந்தி எடுத்தவாறே மயங்கிச்சரிந்தார். கடந்த சில நாட்களாகவே சிறையில் வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்டுள்ளார் வைகோ. இந்த நிலையிலும், தொடர்ந்து நீதிமன்றில் ஆஜராகியிருந்தார்.

நேற்று நீதிமன்றுக்கு வந்த அவர் பிணைமனு தொடர்பான உறுதிமொழிகளை அளித்தார். அப்போது மிகவும் களைத்துப்போய் காணப்பட்டார். இந்தநிலையில் பகல் உணவுக்காக நீதிமன்றில் ஒரு அறைக்குச் சென்றார் வைகோ. அங்கு கட்சியினர் கொடுத்த உணவை வாங்கமறுத்துவிட்டார்.



பின்னர், மீண்டும் நீதிமன்ற விசாரணை நடக்க ஆரம்பித்தவுடன் வைகோ அழைத்து வரப்பட்டார். மிகவும் சோர்வுடன் காணப்பட்ட அவரை நீதிபதி தொடர்ந்து ஓய்வெடுக்கச் சொன்னார். வேலூர் செல்லும் நிலையில் வைகோவின் உடல்நிலை சரியில்லாவிட்டால் சென்னையிலேயே அவருக்கு சிகிச்சை தரலாம் எனவும் நீதிபதி கூறினார். ஆனால், அதை ஏற்க மறுத்துவிட்ட வைகோ, வேலூர் சிறைக்குச் செல்லத் தயார் என்று கூறிவிட்டு சோர்வாகவே வாகனத்தில் ஏறிவிட்டார்.

வைகோவை வரவேற்கப் பிரமாண்டமான ஏற்பாடுகளை ம.தி.மு.க.வினர் செய்து வருகின்றனர். வேலூரில் அவருக்கு பெரும் வரவேற்புத்தரவும், சென்னையில் தி.மு.க.வுடன் சேர்ந்து வரவேற்புத் தரவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் அவரது சொந்த ஊரான கலிங்கப்பட்டியில் மாபெரும் பொதுக்கூட்டத்துக்கும், வரவேற்புக்கும் அந்த ஊர்மக்கள் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

# இந்திய நாடாளுமன்றம் கலைப்பு நான்கு கட்டங்களாகத் தேர்தல்!

முன்கூட்டியே தேர்தல் நடத்துவதற்கு வசதியாக இந்திய நாடாளுமன்றம் நேற்றுக் கலைக்கப்பட்டது. தேர்தல் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையாளர் செய்துவருகிறார்.

மொத்தம் திட்டமிடப்பட்டுள்ள 8 லட்சம் வாக்குச் சாவடிகளில் 5 லட்சம் முதல் 6 லட்சம் வாக்குச் சாவடிகள் பாடசாலையில் தான் ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலை உள்ளது. தேர்தல் பணியில் ஈடுபடும் 35 ஆயிரம் ஊழியர்களில் 17 ஆயிரம் பேர் ஆசிரியர்கள் என்பதால் மார்ச்மாதம் தேர்தல் நடத்த இயலாது என்று தேர்தல் ஆணையாளர் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார். எனவே, ஏப்ரல் மாதம் தேர்தல் நடத்துவதில் தேர்தல் ஆணையகம் தீவிரமாக செயல்பட்டுவருகின்றது.

ஏப்ரல் 15 அல்லது 20 இல் முதல் கட்ட தேர்தல் நடைபெறும் என்று, எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான தேர்தல் அட்டவணை தயாரிக்கும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

அடுத்த வார இறுதியில் தேர்தல் திகதி அறிவிக்கப்படும். மே 5 ஆம் திகதிக்குள் தேர்தல் நடைமுறைகள் முடிவுபெறும். அதற்கேற்ப தேர்தல் அட்டவணை தயாரிக்கப்படும்.

புதிய தலைமை தேர்தல் ஆணையாளராக கிருஷ்ணமூர்த்தி இன்று பதவி ஏற்கின்றார். இன்னொரு தேர்தல் ஆணையாளராக கோபலசாமியும் பதவி ஏற்கின்றார். இவர்கள் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி தேர்தல் திகதியை அறிவிப்பார்கள். 4 அல்லது 5 கட்டமாக தேர்தல் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. 4 கட்டமாக தேர்தல் நடத்தவே தேர்தல் ஆணையகம் விரும்புகின்றது.

ஒவ்வொரு கட்டத்திற்கும் 5 அல்லது 4 நாள் இடைவெளி இருக்கும். 15 அல்லது 20 நாட்களில் தேர்தல் நடைமுறைகள் முடிந்துவிடும். எனவே, தேர்தல் பிரசாரத்துக்கு குறைந்த நாட்களே கிடைக்கும்.

ஒவ்வொரு கட்டத் தேர்தலிலும் வாக்குப் பதிவு நாளன்று அந்தந்தப் பகுதிகளில் முழு அளவில் பாதுகாப்புப் படையினர் குவிக்கப்படுவார்கள். இது சம்பந்தமாக பாதுகாப்பு வரைமுறைகள் தயாரிக்கப்பட்டு மத்திய உள்துறை அமைச்சகத்திடம் தேர்தல் ஆணையகம் ஒப்படைத்துள்ளது. பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி ஆலோசிக்க மத்திய உள்துறை அமைச்சக அதிகாரிகள் அனைத்து மாநில தலைமை செயலாளர்கள், டி.ஜி.பி.க்கள் அடங்கிய கூட்டத்துக்கு தேர்தல் ஆணையகம் ஏற்பாடு செய்துள்ளது. வரும் 9 அல்லது 10 ஆந் திகதி இந்தக் கூட்டம் நடைபெறும்.

# உண்மையான பொய்

மதுரபுரி என்ற நாட்டை ஆண்டு வந்த மன்னர் தனசேகரன் மிகவும் விசித்திரமானவர். தம்முடைய ஆட்சியின் கீழ் வசிப்பவர்க ளில் மிகவும் சாமர்த்தியமாகப் பொய் சொல்வதில் வல்லவர் யார் என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டார்.

அமைச்சரை அழைத்து நமது நாட்டில் யார் சாமர்த்தியமாகப் பொய் சொல்கிறார்களோ, அவர்களுக்கு ஒரு குடம் நிறையத் தங்க நாணயங்கள் தருவதாக அறிவிக்குமாறு ஆணையிட்டார்.

இந்த விடயம் ஊர்மக்கள் அனைவருக்கும் தெரியவந்தது. ஒவ்வொருவரும் தங்களது புழுகுத் திறமையை மன்னருக்கு நிரூபித்துக்காட்ட வந்தவண்ணமிருந்தனர். ஆனால், ஒருவரும் மன்னர் விரும்பியபடி புழுகவில்லை. அதனால், பரிசுப்பொருள் ஒருவருக்கும் கிடைக்கவில்லை.

கடைசியில் ஓர் இளைஞன் அரண்மனைக்கு வந்தான்.



உடனே இளைஞன் மீண்டும் உரத்த குரலில் அட்டகாசமாகச் சிரித்தான். 'மன்னர் அவர்களே! நான் பேசுவது உண்மை என்று தாங்கள் ஒப்புக்கொண்டதற்கு மிக்க மகிழ்ச்சி.

அதாவது, நான் ஒருகுடம் தங்க நாணயங்களை உங்களுக்குத் தந்ததாக ஒப்புக்கொண்டீர்கள். ஆகவே, தங்கநாணயங்கள் நிரம்பிய குடத்தை திருப்பிக் கொடுங்கள் எனப் பணிவுடன் வேண்டினான்.

அவன் சாதாரண உடையணிந்து பைத்தியக்காரன்போல் காணப்பட்டான்.

மன்னர் அவனை நோக்கி, உனக்கு என்னவேண்டும் என்று கேட்டார். அதற்கு அவன் 'மன்னர் பெருமானே! என்னைத் தெரியவில்லையா? ஒரு சமயம் தங்களிடம் ஒரு குடம் தங்கநாணயங்கள் கொடுத்திருந்தேனே, அதை வாங்கிச் செல்லவே வந்தேன்' என்றான்.

மன்னர் - 'என்ன உளறுகிறாய், உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா? நான் உன்னை முன்பின் பார்த்ததுமில்லை, உன்னிடம் எதுவும் வாங்கவுமில்லை' என்று மிகுந்த கோபத்துடன் கூறினார்.

அதற்கு அந்த இளைஞன் 'மன்னர் பெருமானே! இந்த ஏழையிடம் கைநீட்டி வாங்கிய பொருளைத் தரமறுக்கலாமா? இது நியாயமா?



என்று கேட்டான். மன்னருக்குக் கடும்கோபம் வந்துவிட்டது.

'மடையனே யாரைப் பார்த்து நீ என்ன கேட்கிறாய் என்பது தெரியவில்லையா? இந்தப் பொய்க்கு 'உனக்கு மரணதண்டனைதான் கிடைக்கும்' எனக் கூச்சலிட்டார்.

'மகாராஜா அவர்களே! கோபப்படாமல், நன்றாக யோசனை செய்யுங்கள். நான் கூறுவது பொய்யென்று தாங்கள் நினைக்கிறீர்களா?' எனக் கேட்டான்

'சந்தேகமென்ன, உன்னைப்போல் கடைந்தெடுத்த பொய்யன் உலகில் இல்லை. என்றார் அரசன்.

இளைஞன் சிரித்துக்கொண்டே 'மன்னர்பிரான் அவர்களே, அப்படியானால் தாங்கள் வாக்களித்தபடி சிறந்த பொய்யனான எனக்கு ஒரு குடம் தங்கக்காசை அன்பளிப்பாகத் தாருங்கள்' என்று கேட்டான்.

மன்னன் திகைப்படைந்தான். தன் வாயாலேயே சொல்ல வைத்து விட்டானே என எண்ணி, 'இளைஞனே நான் வாய்தவறி ஏதோ சொல்லி விட்டேன். நீ பொய்சொல்லவில்லை, உண்மைதான் சொல்லுகிறாய் என நினைக்கிறேன்' என்றார்.

மன்னர் இளைஞரிடம் மீண்டும் வசமாகச் சிக்கிக் கொண்டதை உணர்ந்து, அவன் சாமர்த்தியத்தை பாராட்டி, அவ்விளைஞனுக்கு ஒரு குடம் நிறையத் தங்கக் காசுகளை அன்பளிப்பாக வழங்கினார். நாட்டிலே கவனிக்கவேண்டிய எத்தனையோ நல்ல காரியங்கள் இருக்க, அவற்றையெல்லாம் கவனிக்காது அண்டப் புழுகனுக்குப் பரிசளிக்க வந்த அந்த முட்டாள் அரசனை நினைத்து நாடே சிரித்தது. அவனுக்குப் புத்தி கற்பித்த இளைஞனைப் பாராட்டியது.

## ஓவியப்போட்டி

சிறுவர்களே உங்கள் ஓவியங்களுக்கு பரிசுதர எண்ணியுள்ளோம். உங்கள் கைவண்ணங்களை இன்னும் மெருகுடன் வரைந்து அனுப்புங்கள். இந்த ஓவியப்போட்டியில் பல விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது, ஆண்டு 1-11 வரையான மாணவர்கள் இதில் பங்குபற்றலாம்.

நீங்கள் வரையும் ஓவியத்தில் நீர்வர்ணம், எண்ணெய் வர்ணம், கலர் பென்சில் போன்றன பயன்படுத்தலாம்.

வெள்ளைத்தாளில் ஓவியத்தினை வரைந்து அனுப்பவும். அனுப்பும் ஓவியத்தின் தாளினை மடிக்காமல் அனுப்பவும். தட்டச்சுத்தாளின் (A4) இல் அமையவேண்டும். நீங்கள் வரைந்த ஓவியஙகளை கீழ்வரும் கூப்பனைப்பூர்த்தி செய்து, அதனுடன் இணைத்து அனுப்பிவையுங்கள்.

மாத இறுதியில் தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்கள் 3 இற்கு பரிசுகள் வழங்கப்படும். அத்தோடு, 10 ஆறுதல் பரிசுகளும் உண்டு. நீங்கள் அனுப்பும் ஓவியங்களில் பரிசுக்குரிய ஓவியங்கள் - இளந்தேனீக்கள் கழகத்தினரால் நடாத்தப்படும் கண்காட்சியில் பார்வைக்காக வைக்கப்படும்.

முழுப் பெயர் :.......................................

கற்கும் பாடசாலை :.......................................

கற்கும் தரம் :.......................................

வீட்டு முகவரி :.......................................

........................ ........... ....................

அதிபர்/ஆசிரியர் ஒப்பம் திகதி மாணவர் ஒப்பம்

ஓவியப்போட்டி
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

இங்கே மடிக்கவும்



# சிறுவர் அரங்கம்



**சிந்தனைக்கு!**
பக்திக்கும் மரியாதைக்கும் உரியது கோயில் மட்டுமல்ல, நாம் பணிபுரியும் இடமும்தான்

## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

### லித்வேனியா

| | | |
|---|---|---|
| நாடு | - | லித்வேனியா குடியரசு. |
| மக்கள் தொகை | - | 3.7 மில்லியன் |
| தலைநகர் | - | வில்னியஷ் |
| மக்கள் இனங்கள் | - | லித்வேனியன், போலிஷ், ரஷ்யன் |
| மதம் | - | ரோமன் கத்தோலிக்கம், லித்தேறன், ரஷ்யன், ஒதொடொக்ஷ், புரட்டஸ்லாந்து, இவான் ஜெனிகல்ஷ், கிறிஷ்டியன் பப்டிஷ்ர், இஸ்லாம் யூடசம். |
| பணம் | - | லிற்றாஷ் |
| தொழில்கள் | - | பெற்றோல் சுத்திகரிப்பு, கப்பல் கட்டும் தொழில், தளபாட உற்பத்தி, துணி தயாரித்தல், உணவு பதனிடல், உர உற்பத்தி, விவசாய உபகரணங்கள் உற்பத்தி, இலத்திரனியல் பாகங்கள் உற்பத்தி, விவசாயம். |

லித்வேனியாவும் அதன் அருகில் அமைந்துள்ள போலந்தும் ஒன்றிணைந்து, போல்டிக் கடலிலிருந்து கருங்கடல்வரை நீண்ட பிரதேசமாக, ஒரு சக்கரவர்த்தியின் ஆட்சியில் அமைந்திருந்தது.

முதலாவது உலக யுத்தத்தின்போது, ஜேர்மனி இந்த நாட்டை ஆக்கிரமித்திருந்தது. 1940 ஆம் ஆண்டில் லித்துவானியா - சோவியத்தின் இராணுவ ஆட்சிக்குட்பட்டிருந்தது.

1941 ஆம் ஆண்டு ஹிட்லர் - லித்வேனியாவைக் கைப்பற்றியிருந்தார். நாஜிக்களின் ஆக்கிரமிப்பின்போது, லித்வேனியாவில் வாழ்ந்த யூதர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். பின்னர் லித்வேனியா - சோவியத் குடியரசின் ஒரு பகுதியாக மாறியிருந்தது.

1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஒரு சுதந்திரநாடாகப் பிரகடனப்படுத்திக்கொண்டது. 1991 இல் ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்துகொண்டது. அரசியல், பொருளாதார காரணங்களுக்காக பல இன மக்கள் இந்த நாட்டில் குடிபெயர்ந்து வாழ்கின்றனர்.

சிறந்த கலாசாரத்தைக் கொண்ட நாடாகத் திகழ்கின்றது. லித்வேனியாவில் மொத்த நிலப்பரப்பின் காற்பகுதி காடுகள் நிறைந்து காணப்படுகின்றது. எல்க், மான், காட்டுப்பன்றி, ஓநாய் ஆகிய மிருகங்கள் இங்குள்ள காடுகளில் காணப்படுகின்றன. இங்குள்ள ஏரியான கவீன்றாஷ் பல இடம்பெயர்ந்துவரும் பறவைகளின் சரணாலயமாக அமைந்துள்ளது.

**அன்புச் சிறுவர்களே!**

உங்களின் கடிதங்கள், ஆக்கங்கள் என்பன எமக்குக் கிரமமாகக் கிடைக்கின்றன. உங்களின் உள்ளத்து வெளிப்பாடுகளான சிறுமடல்களும் எமக்குக் கிடைக்கின்றன.


உங்கள் ஆக்கத்தையும், ஊக்கத்தையும் மனமகிழ்வுடன் பாராட்டுகின்றோம். சிறுவர்களே! நீங்கள் இளந்தேனீக்கள் கழகத்தில் அங்கத்தவராக இருப்பின், நீங்கள் எமது பகுதிக்கு உங்களால் முடிந்தளவு ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள். அவை கதைகள், கவிதைகள், துணுக்குகள், பொது அறிவுகள், விஞ்ஞானத் தகவல் போன்றவனவாக இருக்கலாம். உங்களின் சொந்த ஆக்கங்களுக்கு நாங்கள் என்றும் களம் அமைத்துத் தருவோம். நீங்கள் அங்கத்தவர்களாக இருப்பதன் நன்மை இதுதான். அங்கத்தவர்களாகிய உங்கள் அனைவரையும் வெகுவிரைவில் நாங்கள் ஒன்றுகூட்டிச் சந்திக்க இருக்கிறோம். எனவே, நீங்கள் தொடர்ந்தும் இளந்தேனீக்கள் கழகத்திற்கு கடிதங்கள் எழுதுங்கள், ஆக்கங்களை அனுப்புங்கள். வெகுவிரைவில் கூட்டப்படும் ஒன்றுகூடலில் உங்களுக்கு முழுமையான விளக்கம் அளிக்கப்படும்.

பாசமுடன் -சாரு அக்கா

## பொது அறிவு

1. உலகில் முதல் முதலில் தேசியக்கொடி ஏற்றிய நாடு எது? - டென்மார்க்
2. சர்வதேச தொழிலாளர் நிறுவனம் எங்கு உள்ளது? - ஜெனிவா
3. இலங்கையின் தேசிய மரம் எது? - நாகமரம்
4. யாழ்ப்பாணத்தில் பாய்கின்ற ஆறு எது? - வழுக்கியாறு
5. சிங்களமொழிப் பஞ்சாங்கத்தின் பெயர் என்ன? - இராணம்
6. அஸ்பிரினைக் கண்டுபிடித்தவர் யார்? - டி ரெசர்
7. ஒலிம்பிக் சின்னத்திலுள்ள ஐந்து வளையங்களினதும் நிறங்கள் எவை? - நீலம், சிவப்பு, கறுப்பு, பச்சை, மஞ்சள்.

## வளம்பெற வாழ்த்துகிறோம்



# இளந்தேனீக்கள் கழகம்
## அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- சி.சிவானந்தன்
கற்கும் பாடசாலை :-
தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
புத்தகம் வாசித்தல், கிரிக்கெட்.



முழுப்பெயர் :- க.விஜயதர்சினி
கற்கும் பாடசாலை :-
புனித மரியாள் றோ.க. மகா வித்தியாலயம்
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல்,
விளையாட்டு.

முழுப்பெயர் :- வை.பிரியாளினி
கற்கும் பாடசாலை :-
மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர் :- ச.சந்திரதாஸ்
கற்கும் பாடசாலை :-
வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- ஏ.கிருபாகரன்
கற்கும் பாடசாலை :-
யாழ்ற்றன் கல்லூரி
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
உதைபந்தாட்டம், பத்திரிகை வாசித்தல்,
தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- து.ஜெகன்
கற்கும் பாடசாலை :-
பொலிகண்டி இ.த.க. பாடசாலை
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள்:
ஓவியம் வரைதல், கிரிக்கெட்.

முழுப்பெயர் :- ஸ்ரீ.தருசன்
கற்கும் பாடசாலை :-
பரியோவான் கல்லூரி
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
முத்திரை சேரித்தல், வானொலி கேட்டல்.

முழுப்பெயர் :- லோ.காந்தரூபி
கற்கும் பாடசாலை :-
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல்,
தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- லோ.காந்தரூபன்
கற்கும் பாடசாலை :-
உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி
தரம் :- 11
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல்,
பத்திரிகை வாசித்தல்.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.
இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.
நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
**267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# இளந்தேனீக்கள் கழகம்
## விண்ணப்பம்

முழுப் பெயர் :..........................................

கற்கும் பாடசாலை :..........................................

கற்கும் தரம் :..........................................

வீட்டு முகவரி :..........................................

பிறந்த திகதி :..........................................

ஆர்வமுள்ள துறைகள் :..........................................

..........................................

.................... ....................
திகதி ஒப்பம்

.................... ....................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

இங்கே மடிக்கவும்



# நாடுகளும் நாணயமும்

| | |
|---|---|
| ஐக்கிய அமெரிக்க குடியரசு | - டொலர் |
| ஐக்கிய இராச்சியம் | - ஸ்ரேலிங்பவுண் |
| பிரான்ஸ் | - பிராங் |
| ஒஸ்ரியா | - சிலிங் |
| சுவிற்சர்லாந்து | - சுவிஸ் பிராங் |
| சுவீடன் | - குரோனர் |
| நெதர்லாந்து | - கில்டர் |
| இத்தாலி | - லீரா |
| பெல்ஜியம் | - பிராங் |
| சோவியத் ரஷ்யா | - ரூபிள் |
| சீனா | - யூ ஆன் |
| ஜப்பான் | - யென் |
| இந்தோனேசியா | - ருபியா |
| பிலிப்பைன்ஸ் | - போஸோ |
| தாய்வான் | - தாய்வான் டொலர் |
| இஸ்ரேல் | - இஸ்ரேல் சிகார் |
| மலேசியா | - ரிங்கிட் |
| லெபனான் | - பவுண் |
| ஜோர்தான் | - தினார் |

# அரபு -உரோம எண்கள்

| | | |
|---|---|---|
| 1 - I | 11 - XI | 30 - XXX |
| 2 - II | 12 - XII | 40 - XL |
| 3 - III | 13 - XIII | 50 - L |
| 4 - IV | 14 - XIV | 90 - XC |
| 5 - V | 15 - XV | 100 - C |
| 6 - VI | 16 - XVI | 200 - CC |
| 7 - VII | 17 - XVII | 400 - CD |
| 8 - VIII | 18 - XVIII | 500 - D |
| 9 - IX | 19 - XIX | 900 - CM |
| 10 - X | 20 - XX | 1000 - M |

# நவீனகால உலக அதிசயங்கள்

1. குபுவின் பிரமிட்
2. கொன்ஸ்தாந்திநோபிளிலுள்ள ஹேஜிய சோபியா
3. பைசா நகரத்திலுள்ள சாய்ந்த கோபுரம்
4. வொசிங்ரன் நினைவு மாளிகை
5. ஆக்ராவிலுள்ள தாஜ்மகால்
6. பாரிசிலுள்ள ஈபில் கோபுரம்
7. நியூயோக்கிலுள்ள எம்பயர் மாடிக்கட்டடம்

சு.தர்சினி

# விடுகதைக்குறி விடைகுறி

1) வீட்டுக்குள் பச்சை நிறம், வாசலில் சிவப்பு நிறம். அது என்ன?
2) கிணற்றைச்சுற்றி பயிற்றங்கொடி. அது என்ன?
3) கொக்கு நிற்க, குளம் வற்றுதாம். அது என்ன?
4) நிறத்தில் கறுப்பு, குரலில் இனிப்பு. அது என்ன?
5) வெள்ளைறோட்டில் கறுத்தக் கார் ஓடுது. அது என்ன?
6) செம்பு நிறைய முத்து. அது என்ன?
7) தொப்பென்று விழுந்தான், தொப்பி கழனறான். அவன் யார்?
8) பணவரவுக்கு வந்தவன், வாசலில் கிடக்கிறான். அவன் யார்?
9) சுளகு நிறைய சோளம்பொரி. அது என்ன?
10) மாடுபடுக்க, கயிறு மேயுது. அது என்ன?
11) தலையைச் சீவினால் தாகம் தீர்ப்பவன். அவன் யார்?
12) மேலே போகும், ஆனால் கீழே வராது. அது என்ன?
13) நெருப்புப் பட்டால் அழுவான். அவன் யார்?
14) அள்ளலாம் கிள்ள முடியாது. அது என்ன?
15) எட்டிப் பார்த்தால் புகைமயம், தொட்டுப் பார்த்தால் தண்ணி மயம். அது என்ன?
16) பல் உண்டு ஆனால் கடிக்கத் தெரியாது. அவன் யார்?

## விடைகள்

| | |
|---|---|
| 1. கிளி | 9. வெள்ளி |
| 2. தாலிக்கொடி | 10. பூசணிக்கொடி |
| 3. விளக்கு | 11. இளநீர் |
| 4. குயில் | 12. புகை |
| 5. கண் | 13. மெழுகுதிரி |
| 6. மாதுளம்பழம் | 14. தண்ணீர் |
| 7. பனம்பழம் | 15. பனிக்கட்டி |
| 8. செருப்பு | 16. சீப்பு |


சி. கசீனா
தரம்-10

# கலைச்சொற்கள்

| | |
|---|---|
| E-mail | - மின்னஞ்சல் |
| F.M | - பண்பலை |
| Internet | - இணையம் |
| Digital | - எண்மானம் |
| AIDS | - ஏமக்குறைவு நோய். |
| Compact Disk (CD) | - அடர்தகடு. |
| Media | - ஊடகம். |
| World wide web | - வையக விரிவலை. |
| Key board | - விசைப்பலகை. |
| Cloning | - படியாக்கம். |
| Feminism | - பெண்ணியம். |
| Globalaization | - உலகமயமாதல். |
| Genetic - Engineering | - மரபணு பொறியியல். |
| Museum | - அருங்காட்சியம். |

தி.சாரங்கன்

# உங்கள் கைவண்ணம்



க.துளசிதாஸ்
தரம் -07




க.பிரணவன்
தரம் - 09

# யாழ்.மாவட்டத்திலேயே கூடுதலான பட்டதாரிகளுக்கு வேலையில்லை!

யாழ்.மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை மிக அதிகளவில் காணப்படுவதாகப் பட்டதாரிகள் சங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒப்பீட்டளவில் இலங்கையில் மாவட்ட ரீதியான காணக்கெடுப்பில் யாழ். மாவட்டப் பட்டதாரிகளே அதிகளவில் தமக்குரிய வேலைவாய்ப்பினை பெறாமல் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பட்டதாரிகளிடம் நியமனங்கள் தொடர்பாக எழுந்துள்ள விரக்தியினால், இங்கு அவர்கள் தமது கல்விக்குப் பொருத்தமில்லாத தொழில் செயற்பாட்டை செய்வதினைக் காணக்கூடியதாக உள்ளது. இது ஒருபுறம் இருக்க, இந்தப் பட்டதாரிகள் நியமனத்தில் பல அரசியல் கட்சிகளின் அழுத்தங்கள் காரணமாக நிமயனங்கள் பின்போடப்பட்டுள்ளதாகவும், சென்ற தேர்தல் காலங்களில்கூட தமக்கு வழங்கப்படவேண்டிய நியமனங்கள் தேவையற்ற காரணங்களால் பிற்போடப்பட்டதாகவும் பட்டதாரிகள் தெரிவித்தனர்.

சென்ற ஆண்டு வழங்கப்பட்ட 1000 பட்டதாரிகள் நியமனத்தில், நியம னங்கள் ஏற்காத மிகுதி 281 பேர்களின் நியமனங்கள் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வட-கிழக்கில் 1000 இற்கும் மேற்பட்ட ஆசிரிய வெற்றிடங்களும், ஆயிரத்துக்கு மேற்பட்ட நிர்வாக வெற்றிடங்களும் காணப்படுகின்றன. இவற்றுக்குப் பட்டதாரிகளை நியமனம் செய்யுமாறு விடப்பட்ட கோரிக்கைகள் தட்டிக் கழிக்கப்பட்டுள்ளன. ஆனால், அரச பணிமனைகளில் மீள் நிய மனங்கள் மூலம் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு, 70 வயது முதியவர்கள் தமது காலத்தை கதிரைகளில் கழிக்கின்றார்கள் என வேதனையுடன் ஓர் பட்டதாரி குறிப்பிட்டார். நாடாளுமன்ற உறுப்பினர்களே, அரச அதிகாரிகள் - தமிழ் இளைஞர்களின் காலத்தேவையை உணர்ந்து, உடன் செயலாற்றுமாறு யாழ். மாவட்ட பட்டதாரிகள் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. (205)






பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் 10வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடத்தப்பட்ட 11 நாள் இசைநாடக, கூத்து, கிராமியக் கலைப்போட்டியினை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், மருதங்கேணி உ.அ.அதிபர் கோ.வேலாயுதபிள்ளை ஆகியோர் விருந்தினராகக் கலந்து போட்டியினை ஆரம்பித்து வைப்பதையும், கழக செயற்குழுவினரை முதற்படத்திலும்,

சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அன்பளிப்புச் செய்த சக்கர நாற்காலியை மருதங்கேணி உ.அ.அதிபர் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## தொலைபேசி இணைப்புகளுக்கு

# 4 வருடங்களுக்கு முன் விண்ணப்பித்தும் இதுவரை இணைப்புக்கள் வழங்கவில்லை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய், ஆனைக்கோட்டை பகுதி மக்கள் கடந்த 4 வருடங்களுக்கு முன்னர் ரெலிக்கொம் நிறுவனத்திடம் புதிய தொலைபேசி இணைப்புக்கு விண்ணப்பித்தும், இதுவரை இணைப்புக் கிடைக்கவில்லை.

மக்கள் தமது அவசர தேவையினைக் கருத்தில்கொண்டு, நான்கு வருடங்களுக்கு முன்பு புதிய தொலைத்தொடர்பு இணைப்புகளும் விண்ணப்பித்தும், இதுவரை இணைப்புக்கிடைக்கவில்லை. இந்த விடயம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டபோது - விண்ணப்பித்த ஒழுங்குமுறையில் இணைப்புகள் கொடுக்கப்படுகின்றன எனத் தெரிவித்தார்.

ஆனால், 4 வருடங்களுக்குப் பின்னர் விண்ணப்பித்த வேறு பிரதேச மக்களுக்குப் புதிய தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கரைச்சி அபிவிருத்தி நிறுவனத்தால் வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் ஒஸ்க்பாம் நிறுவனத்தின் நிதி உதவியுடன் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனத்தினால் கடந்த வருடம் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதன் ஒரு கட்டமாக - அக்கராயன்குளம், யூனியன்குளம், கோணாவில் போன்ற இடங்களில் 06 பொது கிணறுகளையும், சுயதொழில் கடன் வழங்கும் திட்டத்தில் சுமார் 15 இலட்சம் ரூபா நிதியினையும் இந்தக் கிராமங்களிலுள்ள மக்களுக்குக் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனம் வழங்கியுள்ளது.


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நான்காவது அகவையில்;



பெயர் : இ.ஹரிமனோகர்
முகவரி : வவுனியா.

நான்காவது அகவையில்;



பெயர் : இ.சஜீவன்
முகவரி : வவுனியா.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றோர் ஒப்பம்


# முகமாலை சோதனைச்சாவடியில் கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

முகமாலைச் சோதனைச் சாவடியில் கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள் - கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது . அந்த அடையாள அட்டைகள் பின்வருமாறு -

தேசிய அடையாள அட்டைகள்- ஆ.மணிவண்ணன் - (யாழ்ப்பாணம்), மு.சிவகுமார் (கண்ணகைபுரம், கிளிநொச்சி), வ.வேலானந்தன்(பாலிநகர், வவுனிக்குளம்), கா.செல்லத்துரை (நெல்லியடி, கரவெட்டி), சு.செல்லம்மா(புங்குடுதீவு), து.சுந்தரசபேசன் (அளவெட்டி), வ.சிவபாக்கியம் (எழுதுமட்டுவாழ்), க.வடிவேலு (மன்னார் வீதி, பூநகரி), ச.கருணாகரன் (சந்திபுரம், மட்டுவில் வடக்கு), ஏ.இராசலட்சுமி (உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு), இ.கமலாவதி (மானிப்பாய்), சு.நகுலேந்திரன் (கிளிநொச்சி), த.வசந்தா (தொல்புரம், சுழிபுரம்), வி.இலட்சுமி (கோவிலாக்கண்டி, தென்மராட்சி), த.வரதன் (துன்னாலை, கரவெட்டி), ஆ.உத்தமி (கண்டாவளை, கிளிநொச்சி), மு.முகமட்பாரீஸ் (குளததடி, நாவலப்பிட்டி),

க.சரஸ்வதி (நல்லூர்), இ.விக்னராஜா (மானிப்பாய்), ச.கனகசபை (சுழிபுரம்), ந.சிவாயினி (முள்ளியவளை), இ.ரவி (வல்வெட்டித்துறை), க.செல்வதீபன் (வசாவிளான்), த.நகுலாம்பிகை (முள்ளியவளை), த.இராசலட்சுமி (செட்டியகுறிச்சி), ஆ.சிவபாஸ் மகேந்திரன் (மருதங்கேணி), ந.பராசக்தி (திருமலை), வீ.கந்தையா (சரசாலை), மு.பெரியதம்பி (வலிகாமம் மேற்கு), சு.சின்னத்தம்பி (கிளிநொச்சி), பொ.சிவராசா (எழுதுமட்டுவாழ்), வே.வள்ளியம்மா (நாவலப்பிட்டி), பா.கிருஸ்ணராஜ் (கணேஸ்வரம்).

ஆகிய அடையாள அட்டைகளைக் - கொடிகாமம் பொலிஸ் நிலைய சிறுகுற்றப்பிரிவு காரியாலயத்தில் உரியவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியான சேனாதீர கேட்டுக்கொண்டார்.

## மரதன் ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அராலி இந்துக்கல்லூரியின் இந்த ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டியினை முன்னிட்டு நீண்டதூர மரதன் ஓட்டப் போட்டியினை, நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர், பழைய மாணவர் சங்க அனுசரணையுடன் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருப்பதாக அதிபர் எஸ். மோகனநாதன் தெரிவித்தார்.

## தரம் 6 ஆசிரியர்களுக்கான சமய பாட செலயமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 6 இல் சைவநெறி பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு ஒன்று நாளை மு.ப 8.30 மணி முதல் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த செயலமர்வில் பங்குபற்றவரும் தரம் 6 இல் சைவநெறி கற்பிக்கும் ஆசிரியர்கள் பாடத்திட்டம், கைநூல், எழுதுபொருட்கள் ஆகியவற்றை கொண்டுவருமாறு யாழ்.கல்வி வலய பணிப்பாளர் விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (58)

# போதியளவு அரிசி கையிருப்பில் இல்லாததால் ஜனவரி மாத நிவாரணம் வழங்குவதில் தாமதம்

போதியளவு அரிசி கையிருப்பில் இல்லாததால், ஜனவரி மாதத்திற்குரிய நிவாரணம் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டிருப்பதாக யாழ்.செயலகத்தின் புனர்வாழ்வுக் கிளையின் திட்டமிடல் பணிப்பாளர் சுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

கடந்த ஆண்டுக்குரிய நிவாரணங்கள் யாவும் இந்த ஆண்டு ஜனவரி மாதத்துடன் வழங்கப்பட்டு, நிறைவடைந்திருக்கவேண்டும். எனினும், டிசம்பர் மாததிற்குரிய இறுதி நிவாரணம் இப்பொழுதும் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

இந்த நிவாரணம் வழங்கப்பட்டு முடிந்ததும், இந்த ஆண்டுக்கான ஜனவரி மாத நிவாரணம் வழங்கபடவேண்டியுள்ளது. இதற்குப் போதிய அரிசி கையிருப்பில் இல்லை. இந்த அரிசியைப் பெறுவதற்கான கூறுவிலை கோரல் இன்னமும் இடம்பெறவில்லை.

அரிசிக்கான கூறுவிலை கோரி, அதனைப் பெறுவோரிடமிருந்து அரிசி கொள்வனவு செய்யப்பட்ட பின்னரே, இனி நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இதனால், நிவாரணம் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட வாய்ப்பிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# கடலில் மீன்பிடிக்க படையினர் தடை

(வடமராட்சி)

பருத்தித்துறை கடலில் மீன்பிடிப்பதற்குப் படையினர் தடை விதித்துள்ளனர். பருத்தித்துறைக் கரையோரப்பகுதியில், நேற்றுமுன்தினம் சுதந்திரதினத்தன்று கறுப்புக்கொடிகளைக்கட்டி, சுதந்திரதினத்தைக் கறுப்பு தினமாக அனுஷ்டித்தனர்.

கறுப்புக் கொடிகளைக் கட்டியவர்களை இனங்காட்டித் தரும்வரை, கடற்தொழிலுக்குச் செல்வதை, மற்றும் கடலுக்குள் யாராவது இறங்குவதற்கும் அனுமதிக்கமுடியாது எனப் படையதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## மின்விளக்கு இன்மையால் மக்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிறவுண் வீதிப்பகுதியில் போதிய மின்விளக்குகள் இன்மையால், இரவுவேளைகளில் மக்கள் போக்குவரத்திற்குப் பெரும் சிரமமேற்பட்டுள்ளது.

சுமார் 2 கிலோ மீற்றர்கள் நீளமான இந்த வீதியில், ஆறு மின்விளக்குகளே பொருத்தப்பட்டுள்ளன.

இது இரவு நேரப் பயணிகளுக்குப் போதிய வெளிச்சத்தை வழங்குவதாக அமையாமையால், பாதசாரிகள் மற்றும் சைக்கிள் பயணிகள் அதிகளவில் பாதிப்புக்குள்ளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## வாரநோக்கு - யாழவன்

*ஐம்பத்தாறில் தொடங்கிய இனக்கலவரம் எண்பத்துமூன்றிலே உச்சம் பெற்று, அதன் வழியாகக் கொடிய போர் ஒன்றுக்குத் தமிழ்மக்கள் முகங் கொடுத்து, ஆறாத காயங்களை ஏராளமாகச் சுமந்து, இன்று யாருமே அசைக்க முடியாத நிலையிலே வலுவடைந்து நிற்கின்றார்கள். ஆனாலும் கூட, அவர்களையுமே ஆட்டம் காணவைக்கும் சில பிரச்சினைகள் தொடர்ந்தும் நீடித்துக்கொண்டுதானிருக்கின்றன.*

# (சு)தந்திர தினம்...?

கடந்தவாரம் வழமையான வாரங்களை விட, வித்தியாசமானதாக அமைந்திருக்கிறது. தென்னிலங்கை வாழ் சிங்கள மக்களுக்கு ஏதோவொரு நிறைவைத் தரும் வாரமாகவும், வடபகுதி வாழ் தமிழர்களுக்கு ஏன் - பொதுவாக ஈழத்தமிழர்கள் அனைவருமே துயரம் தோய்நத நினைவுகளை மீட்டுப்பார்க்கும் வாரமாகவும் கடந்துசென்றிருக்கிறது.

கடந்த புதன்கிழமை, இலங்கையின் சுதந்திரதினம். இலங்கை பிரித்தானியர்களின் ஆளுகையிலிருந்து விடுபட்டு, ஐம்பத்தாறு ஆண்டுகள் உருண்டோடியிருக்கின்றன. அதாவது, இலங்கை சுதந்திரமடைந்து ஐம்பத்தாறு ஆண்டுகள் கடந்துபோய்விட்டன. ஆனால், தமிழர்களைப் பொறுத்தவரையிலே இந்த ஐம்பத்தாறு ஆண்டுகளும், ஐம்பத்தாறாயிரத்திற்கும் அதிகமான ஆறாத உள, உடல் வடுக்களை ஏற்படுத்திவிட்டுத்தான் விலகிப்போயிருக்கின்றன.

ஐம்பத்தாறில் தொடங்கிய இனக்கலவரம் எண்பத்துமூன்றிலே உச்சம்பெற்று, அதன் வழியாகக் கொடிய போர் ஒன்றுக்குத் தமிழ்மக்கள் முகங்கொடுத்து, ஆறாத காயங்களை ஏராளமாகச் சுமந்து, இன்று யாருமே அசைக்க முடியாத நிலையிலே வலுவடைந்து நிற்கின்றார்கள். ஆனாலும்கூட, அவர்களையுமே ஆட்டம் காண வைக்கும் சில பிரச்சினைகள் தொடர்ந்தும் நீடித்துக்கொண்டுதானிருக்கின்றன.



ஒவ்வொரு சுதந்திரதினமும் கடந்து செல்லும்போதும் தமிழ்மக்கள் மத்தியிலே ஏதோவொரு ஏமாற்றவுணர்வு மீதமாகிக்கொண்டே செல்கிறது. அந்தவகையிலே இந்தவருட சுதந்திரதினம், பலவித ஏமாற்றங்களை அவர்களுக்கு அள்ளிக்கொடுத்துவிட்டு அகன்று சென்றிருக்கின்றது.

கடந்த வருட சுதந்திரதினத்தோடு ஆரம்பமான, விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசிற்கும் இடையிலான - சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம், விரைவிலேயே நிரந்தரமானதொரு தீர்வு ஏற்படும், போர் மேகங்கள் எமது மண்ணைவிட்டு கலைந்து செல்லும், அதன் பிற்பாடு எங்கள் அப்பு, ஆச்சி ஆண்ட எமது சொந்த மண்ணுக்குத் திரும்பிச் செல்லலாம் அதன்மூலமாக அகதி வாழ்வு அடியோடு அகன்றுவிடும், போருக்குப் பயந்து புலம்பெயர்ந்த உறவுகள் எல்லாம் ஊருக்குத் திரும்பிவரும், சிறைக்கூடங்களிலே அநியாயமாக வாடும் எம் உறவுகள் சுதந்திரக்காற்றைச் சுவாசிக்க வெளியே வருவார்கள், பிரிந்துபோன சொந்தங்கள் எல்லாம் ஒன்று கூடி, எங்களூர் கோயிலிலே ஆனந்தமாக திருவிழாக் கொண்டாடலாம், இரவென்ன பகலென்ன எந்த நேரமும் எங்கள் கடலிலே நாம் உலா வரலாம், சுற்றி வளைப்புக்களும் சோதனைச் சாவடிகளும் அடியோடு அகன்றுவிடும் என அடுக்கடுக்காகக் கனவு கண்டார்கள் அப்பாவித் தமிழ்மக்கள்.

ஆனால், இவற்றில் எதுவுமே இதுவரை நிறைவேறவில்லை. தொடர்ந்தும் ஏமாற்றங்கள்-தொடரும் போராட்டங்கள், உரிமைக்கான ஆயுதப் போராட்டம் ஓய்ந்துள்ள இந்த சூழ்நிலையிலே அகிம்சை வழிப்போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றை முன்னெடுப்பவர்கள் போராளிகள் அல்ல. வெறும் சாதாரண பொது மக்கள். ஆனால், இவர்களின் சத்தியையும், பலத்தையும் இலேசாக எடைபோட யாராவது முனைந்தால், விளைவுகள் விபரீதமானவையாகவே இருக்கும்.

"சாது மிரண்டால் காடு கொள்ளாது" என்பதுபோல, மக்கள் சத்தி மடைதிறந்தால் அதனை எதிர்க்க யாருக்கும் துணிவிருக்காது, எதிர்க்கவும் முடியாது, சுதந்திரதினத்தைத் தமது கரிநாளாகவே எடுத்திருக்கிறார்கள் ஈழத் தமிழ்மக்ள். அவர்கள் பக்கம் எந்தவித தப்புமில்லை. முழுத் தப்புமே இனவெறி கொண்ட சிங்கள ஆட்சியாளர்கள் மீதுதான்.

அன்று இந்தியா சுதந்திரமடைந்தபோது, முஸ்லிம் மக்கள் தமக்கென தனியலகு கேட்டார்கள். எனவே, பிரித்தானியர் இந்திய தேசத்தை இரண்டாகப் பிரித்து, பாகிஸ்தானை முஸ்லிம்களிடம் ஒப்படைத்தனர். இதேபோன்றதொரு நிலைமை இலங்கையிலும் ஏற்பட்டிருந்தால், இன்று எந்தவித பிரச்சினைகளுக்குமே இடம் இருந்திருக்காது. சிலவேளைகளில் எல்லைப் பிரச்சினைகள் எழுந்திருக்கலாம். அதனால், பொதுமக்கள் பாதிப்படைய பெரும்பாலும் வாய்ப்புக்கள் இல்லை.

ஆனால், இந்தியாவைப் பிரித்தானியர் பிரித்தபோது, எமது தமிழ்த் தலைவர்கள் சிங்களத்தலைவர்கள் மீதுகொண்ட அதீத நம்பிக்கையின் காரணமாகப் பிரிவினைக்குரிய விண்ணப்பத்தைப் பிரித்தானியர்களுக்கு வழங்கவில்லை. நம்பிக்கெட்ட இனமான எமது தமிழினம், சிங்களத் தலைமைகள்மீது கொண்ட நம்பிக்கைக்குப் பதிலாகச் சிறுபான்மை இனமெனும் அடக்குமுறையைப் பரிசாகப் பெற்றனர்.

தனிச்சிங்களச் சட்டத்தை அரங்கேற்ற முயன்ற இனவாத அரசியல் தலைமைகள், அதன்மூலமாக இலங்கையை பௌத்த - சிங்கள நாடாக மாற்றமுனைந்தன. பௌத்த மத பீடங்கள் - சிறுபான்மை இனத்தவரின் குரல் வளையை நெரித்து, அவர்களின் அவல ஒலியைக்கூட வெளியே கேட்காதபடி செய்தன பேரினவாதத் தலைமைகள். போரும் அதன் விளைவான உயிரிழப்புக்கள், உடமை இழப்புக்கள், அழுகுரல் ஓசைகளும் தமிழர் தாயகத்திலே நித்தச்செய்தியாகப் பதிக்கப்பட்டன. இதைக் கண்டும், காணாதமாதிரி இருந்தது சர்வதேச கபடத்தன அரசியல்.

போரைத் தமிழ்மக்கள்மீது தாமாகவே திணித்து, இன்று ஆப்பிழுத்த குரங்குகள்போல, அடிபட்டுப்போய்விட்டன கபடத்தன அரசியல் நாடகங்கள். தமிழ்மக்களைப் போர்மூலம் வெல்லமட்டுமல்ல, அழிக்கவும் முடியாததென்ற உண்மையைக் காலம் கடந்து புரிந்துகொணட தென்னிலங்கை அரசியற்தலைமைப்பீடங்கள், அதனாலேயே இன்று சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு, அதன்மூலமாக ஒரு நிரந்தரத் தீர்வைக் காணமுயல்கின்றன. அதற்கும் சில அடிவருடிகள் ஆப்பு வைத்து, தமது அரசியல் வாழ்க்கையை ஒரு மாதிரியாக இழுத்துச் செல்கின்றனர்.


சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமானபோதும்கூட, சிறைகளில் வாடும் தமிழ் இளைஞர்கள் விடுவிக்கப்படவில்லை. உயர் பாதுகாப்பு வலயம் என்னும் கொடிய போர்வைக்குள் அடக்கப்பட்டுள்ள தமிழர்களுக்குச் சொந்தமான வீடுகள், காணிகள் என்பன மீளளிக்கப்படவில்லை. படையினரால் கைது செய்து காணமற்போனவர்கள் பற்றிய தகவல்களோ இதுவரை வெளியிடப்படவில்லை. இந்த நிலையில் தமிழ் மக்களால் எப்படி சுதந்திர தினத்தைச் சுகமாகக் கொண்டாட முடியும்.

அதனால், தமக்குச் சுதந்திரம் கிடைக்கும் வரை, சுதந்திர தினங்களைக் கரிநாட்களாகவே கருதி, அதற்கேற்றவாறு நடந்துவருகிறார்கள். இந்தமுறையும் உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணபடவேண்டுமெனக்கோரி, உண்ணாவிரதப் போராட்டங்களை வலிகாமம் வடக்கிலும், தென்மராட்சி தெற்கிலும், கொழும்புத்துறையிலும் மேற்கொண்டனர்.

காணாமற்போன தமது உறவுகள் பற்றிய உரிய தகவல்களை வெளிப்படுத்தவேண்டும். விசாரணைகள் எதுவுமின்றி நீண்டகாலமாகச் சிறையில் வாழும் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் விடுவிக்கப்படவேண்டுமெனக் கோரி, யாழ்.செயலகம் முன்பாக மறியற்போராட்டத்தில் குதித்தனர்.

ஆனால், இவர்களது மன உணர்வுகளைக் கூட, ஆயுதமுனையிலே அடக்க அரசதரப்பு முயன்றது. கொழும்புத்துறைப் பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களை அடித்து விரட்டியும், பெண்களின் சேலைகளைப் பிடித்து இழுத்தும், அடாவடித்தனத்தில் பொலிஸார் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பான முறைப்பாடு ஒன்றும் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில்தான் இலங்கையில் தமிழ்மக்களுக்கான சுதந்திரம் இருக்கிறது.



தமது உணர்வுகளை வெளிப்படுத்தக்கூட, அவர்களுக்குச் சுதந்திரம் இல்லை. அந்த உரிமைகூடப் பலதடவைகள் மறுக்கப்பட்டுள்ளது. பொங்குதமிழ் தொடக்கம் சாதாரண போராட்டம்வரை அவர்களது உரிமைகள் மதிக்கப்படவில்லை. மாறாக மிதிக்கப்பட்டுள்ளன. இந்த உண்மைகளே இலங்கையில் தமிழ்மக்கள் சுதந்திரமாக வாழ்கின்றார்களா? என்பதை உலகிற்குச் சொல்லப் போதுமானது.

இந்தமுறை சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் - தென்னிலங்கை அரசியற் தலைமைகள் மத்தியிலே ஒரு தென்பைக் கொடுத்திருக்கும். விடுதலைப் புலிகள் இரண்டு வருடங்களுக்கு மேலாக, யுத்த நிறுத்தத்தை முறையாகக் கடைப்பிடிப்பதனால், தற்கொலைத் தாக்குதல் எதுவும் நடைபெறாது என்ற மனத்துணிவோடு, நிகழ்வுகளிலே பங்கேற்று இருப்பார்கள். இந்தக் கருத்தை ஜனாதிபதியும் ஆமோதித்துள்ளார்.

தனது சுதந்திரதின உரையிலே - விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தத்தை முறையாகக் கடைப்பிடித்துவருவதற்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளார். தற்கொலைக் குண்டுத் தாக்குதல் அச்சம் நீங்கினாலும், ஏதோவொரு அச்சம் அவர்களைத் தொட்டுவிடும்.

பலருக்கு ஆட்சி கவிழுமோ? மீண்டும் பதவிக்கு வரலாமோ? என்ற அச்சம். சிலருக்கு கூட்டணி குழறுபடியில் முடியுமோ? என்றொரு அச்சம். இவ்வாறு அச்சத்திற்குக் குறைவில்லை தென்னிலங்கை அரசியல் வாதிகள் உள்ளத்தில்.

மக்கள் மத்தியிலும் மீண்டும் ஒரு அச்சம் முளைவிடத் தொடங்கியுள்ளது. போர் மீண்டும் வருமா? சமாதான முன்னெடுப்புக்கள் இடையிலே தடைப்படுமா? என்ற அச்சம். வருகின்ற சுதந்திர தினத்திற்கு இடையில் இந்த அச்சத்திற்குப் பதில் கிடைத்துவிடும்.

தமிழ்ப்பிரதேசத்தில் - இந்தமுறை சுதந்திர தினத்திற்கு தேசியக் கொடிகள் பறப்பதற்குப் பதிலாகக் கறுப்புக் கொடிகளே பறந்துள்ளன. யாழ்.குடாநாட்டிலே - தேசிய கீதத்திற்குப் பதிலாக, சோககீதமே இசைத்துள்ளது.

ஆனால், படைமுகாம்கள், இராணுவக் காவல் அரண்கள் என்பவற்றிலே சிங்கக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. அரச அலுவலகங்களிலும், கடமைக்காகச் சில ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால், மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் எதுவித கொண்டாட்டங்களும் நடைபெறவில்லை என்த் தெரிவிக்கப்படுகிறது.

கடைகள் அனைத்தும் பூட்டப்பட்டு, கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டு- தமிழ்மக்கள் தமது முழுமையான உணர்வை வெளிப்படுத்தியுள்ளனர். இந்த உணர்வுகளின் ஆழத்தை அரசியல் தலைவர்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். அல்லாவிடில் அவர்கள் பதவிக்கு மட்டுமல்ல, நாட்டிற்கே பேரழிவு விளையும். அந்த அழிவை ஈடுசெய்ய நிதியுதவி வழங்க எவருமே முன்வரமாட்டார்கள். மீண்டும் நாடு கெட்டுக் குட்டிச் சுவராகும்.

கொலைகள், கொள்ளைகள் புரிந்துவிட்டு சிறைகளை நிரப்பும் தீயசக்திகளை - சுதந்திர தினத்தைக் காரணம் காட்டி விடுவிப்பதை விடுத்து, எதுவித குற்றமும், விசாரணைகளும் இல்லாது சிறையில் வாடும் தமிழ் இளைஞர்கள் விடுவிக்கப்படவேண்டும். அதன்மூலமாகவேதான், இலங்கை சுதந்திரமடைந்தது என்ற உண்மையைத் தமிழ்மக்கள் நம்புவார்கள். அதுவரை அந்தச் செய்தி அவர்களைப் பொறுத்தவரையில் பொய்யாகவே இருக்கும்!

# அபிவிருத்தி வங்கியில் கொள்ளை அதிரடிப்படை வீரர்கள்மீது சந்தேகம்

## பொலநறுவை பெத்ரிகிரியவில் சம்பவம்

(கொழும்பு)

பொலநறுவை பெத்ரிகிரிய அபிவிருத்தி வங்கிக் கொள்ளையில் அதிரடிப்படை வீரர்கள் இருவர் ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஜனவரிமாதம் 5 ஆம் திகதி பெத்ரிகிரிய அபிவிருத்தி வங்கீயில் இருந்து, சுமாா ஒரு கோடி ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான பணமும், நகையும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவந்துள்ளனர். நேற்றுமுன்தினம் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார். இவரிடமிருந்து சுமார் 80 இலட்சம் ரூபா பெறுமதியான நகையும், பணமும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த சந்தேக நபர் கொடுத்த தகவலின் அடிப்படையில் பெத்ரிகிரிய வங்கிக் கொள்ளையில் ஐந்து ஆயுதம் தாங்கிய நபர்கள் ஈடுபட்டுள்ளதாகவும், இவர்களில் இரண்டுபேர் இராணுவ அதிரடிப்படையினர் எனவும் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் கொழும்பில் நடைபெற்றுவருகின்றன.

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இணர்ஊழ்த்தும் நாறா மலரனையர் கற்றது*
*உணர விரித்துரையா தார்.*
திருக்குறள்.

## நமது நோக்கு

### விசுவாசமற்ற அரசியல் தலைமைகளும், விபரீதமாகிவரும் நாட்டின் எதிர்காலமும்

இலங்கையின் அரசியல் நெருக்கடிகள் நாளுக்கு நாள் மாறுபட்ட வடிவங்களை எடுத்துவரும்வேளையில், நாட்டை நிர்வகிப்பது பிரதமரின் தலைமையிலான அரசாங்கமா, அல்லது ஜனாதிபதியின் கையிலுள்ள நிறைவேற்று அதிகாரமா, என்ற கேள்விக்கான விடையைக் கண்டுபிடிப்பதும் கடினமானதாக வுள்ளது.

ஏற்கனவே இந்த இரட்டை ஆட்சிமுறை ஏற்படுத்தியுள்ள குழப்பங்கள் மற்றும் மோதல்கள் காரணமாகத், தேசத்தின் அரச நிர்வாகக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள சிதைவானது, நாட்டின் எதிர்காலம் குறித்து எவராலும் தீர்க்கமான ஒரு முடிவினை எடுக்கமுடியாத சூழலை உருவாக்கியுள்ளது.

எனினும் ஆளும் அதிகாரவர்க்கத்தினர் அது குறித்து சிந்திக்கும் நிலையில் இல்லை. அவர்கள் மக்களைப் பற்றியோ, நாட்டைப்பற்றியோ, சிந்திக்கும் தேசிய உணர்வை இழந்து வெகுகாலமாயிற்று என்பதை அவர்களின் அரசியல் செயற் பாடுகள் ஒவ்வொன்றும் அடையாளப்படுத்தியே வருகிறது.

அவர்களின் இலக்கு, பதவி அதிகாரத்தைப் பாதுகாப் பதேயாகும். அடுத்த தேர்தலில் ஆட்சியை கைப்பற்றிக் கொள்வதற்கான வியூகங்களை அமைக்கும் தீவிரமே அவர் களின் ஆத்மாவின் தேடலாகாவும் உள்ளது. அதற்கான மூலோபாயங்களும், தந்திரோபாயங்களும் மட்டுமே தற்போது அவர்களின் சிந்தனையில் சூறாவளியாகிநிற்கிறது. இந்த நிலையில் - இனப்பிரச்சினையையோ, சமாதான முன்னெடுப்பையோ கூட அவர்கள் தத்தம் அரசியல் அபிலாஷைகளை எட்டுவதற் கான விவகாரங்களாகவே கையாள முனைகின்றனர் என்பதும் மறுக்கமுடியாத உண்மையேயாகும். சந்திரிகா ஒரு கருத்தை முன்வைத்தால், ரணில் அதை நிராகரித்து மற்றொரு கருத்தை முன்வைப்பார். இதேவேளை, ரணில் கூறும் யோசனைகளை சந்திரிகா ஏற்றுக்கொள்ளமாட்டார். ஆனாலும், இருதரப்பினரும் மாறிமாறி ஒருவரையொருவர் தாக்கி, குற்றம்சுமத்தி அன்றாடம் விடும் அர்த்தமற்ற அறிக்கைகள் ஊடகங்களுக்கு தீனியாகின் றனவே தவிர, உருப்படியாக எதனையும் சாதிப்பதாக இல்லை. வரட்டுக் கௌரவம் பார்க்கும், பதவி வெறிகொண்ட, அரசியல் தலைமைகளின் ஆட்சி அதிகாரம் மக்களை ஏமாளிகளாக்கி வட்டுள்ளது என்பதுடன், நாட்டையும் மிக மோசமான நிலைக்கு இட்டுச்சென்று கொண்டிருக்கிறது.

இரு தசாப்த கால போரால் இன்னல்கள், இழப்புகள் ஆகியவற்றைச் சந்தித்த மக்களும், அழிவுகளையும், ஆபத்துக் களையும் மட்டுமே கண்டுவந்ததேசமும், அதிலிருந்து மீள, ஒரு புதுவிடியலை காணக்கிடைத்த இந்த சமாதான சூழலின் சந்தர்ப்பத்தினை உரிய முறையில் பயன்படுத்தி, சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் ஒரு தீர்க்கமான, நிரந்தரமான அரசியல் தீர்வொன்றினை உருவாக்கக் கூடிய வாய்ப்பினை, ஆட்சியாளர்களின் பதவிவெறியும், அதிகாரப்போதையும் பேரின வாத சிந்தனைகளும் பயன்படுத்த தவறிவிட்டன என்றே கூற வேண்டும்.

இன்னொரு தடவை, இப்படியானதோர் வாய்ப்பு கிடைக் குமா என்பது சந்தேகமே...!

இரண்டாண்டு கால போர்நிறுத்தம், சமாதானச்சூழல், ஏற்படுத்தாத அமைதி நிலையை இனியொருவாய்ப்பு ஏற்படுத் தப்போவது கிடையாது. இதுதான் நிரந்தர அரசியல் தீர்வொன் றினை பேச்சுவார்த்தைகளின் மூலம் காண்பதற்கான இறுதி வாய்ப்பு என அரசியல் நிபுணர்களும், ஆய்வாளர்களும், நோக் கர்களும் தெளிவாகவே உணர்த்தியுள்ள நிலையில், அதுபற்றி பொறுப்புணர்வுடன் சிந்தித்து செயற்பட மறுத்து அடம்பிடிக்கும் ஜனாதிபதியும், பிரதமரும் சுதந்திரம், விடுதலை, ஜனநாயகம், தேசியம் ஆகியவைபற்றி பீற்றிக்கொள்வதுதான் சர்வதேச கோமாளித்தனமாகும்.

நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குறியாகிவிட்டது என ஓல மீட்டு ஒப்பாரி வைத்துக்கொண்டே ஜனாதிபதி - பிரதமரின் கீழிருந்த பாதுகாப்பு, ஊடகத்துறை மற்றும் உள்துறை அமைச்சுக் களை அபகரித்துக் கொண்ட அன்றே அவரின் ஜனநாயக அணுகுமுறை கேள்விக்குறியானதுடன், நாட்டின் பாதுகாப்பின், சமாதானத்தின், அமைதிப் பேச்சுவார்த்தையின் எதிர்காலமும் சந்தேகத்திற்குரியதாகிவிட்டது.

படைதரப்பைக்கையாளும், கட்டுப்படுத்தும், அதிகாரம் ஜனாதிபதியின் கீழ்கொண்டுவரப்பட்டது முதல், அவர்களின் சுயாதீன, அமைதிக்கு எதிரான செயற்பாடுகள் தீவிரம் கொள்ளத் தொடங்கிவிட்டன.


அண்மைக்காலமாக அவர்கள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள், தமிழ் மக்களை மீண்டும் போர்க்கோலம் கொள்ளவைக்கும் முடிவுக்கு இட்டுச்செல்வதாக அமைந்து வருகின்றதை உணர்த்துவதாகவே உள்ளது.

ஜனநாயகரீதியிலான, சாத்வீகமுறையிலான தமிழ் மக்களின் நியாயமான போராட்டங்களை கொச்சைப்படுத்திக் குழப்பமுயல்வதும், புரிந்துணர்வுடன்பாட்டை மதித்து நடக்கும் போராளிகள் மீது தாக்குதல் நடத்துவதும், இம்சைப்படுத்து வதும், அவர்களைச் சினம்கொள்ளவைக்கும் முயற்சிகளே யாகும். இதனைக் கட்டுப்படுத்தவேண்டிய பொறுப்பு தற்போது ஜனாதிபதிக்கே உரியது. அவர் இவ்விடயத்தை ஒழுங்குக்கு கொண்டுவந்து கட்டுப்படுத்தாவிட்டால், இதனால் ஏற்படப் போகும் அவலங்களுக்கும் அவரே பொறுப்பேற்க வேண்டி நேரிடும்.

பிரதமர் தனது பொறுப்புக்களை, பாதுகாப்பு தொடர்பான பொறுப்புக்களை ஜனாதிபதி அபகரித்துவிட்டதால் தான் அதிகாரமற்ற ஒருவர் என்பதை பகிரங்கமாக பிரகடனம் செய்து சிலமாதங்கள் கடந்துவிட்டன.

## நாடும் நடப்பும்

செய்தி:- ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையேயான அதிகாரப்பிரச்சினை தீர்த்து வைக்கப் பட்ட பின்பே சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என அரசியல் அவதானிகள் கருத்து




ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான அரசியல்போட்டி

# தூத்துக்குடி கப்பல் சேவை ரத்து கேரளாவிலிருந்தே நடைபெறும்

(சென்னை)

தூத்துக்குடி - கொழும்புக்கு இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்து கானல் நீராகிவிட்டதாக, தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது திருவனந்தபுரம் - கொழும்புக்கு இடையே கப்பல் போக்குவரத்தை மேற்கொள்ள இலங்கையரசு முடிவு செய்துள்ளது.

தமிழக அரசு மற்றும் சில அரசியல் கட்சிகளின் எதிர்ப்புக் காரணமாக இந்தநிலை ஏற்பட்டுள்ளது. இதனால், தமிழக சுற்றுலா வளர்ச்சி பெரும் சரிவையும், கேரள மாநில சுற்றுலா பெரும் வளர்ச்சியையும் காணும்நிலை உருவாகும் எனக் கூறப்படுகிறது.

தமிழகத்தின் சுற்றுலா வளர்ச்சி, வியாபாரம் ஆகியவற்றை வளர்க்கும் விதத்தில் கொழும்புக்கும், தூத்துக்குடிக்கும் இடையே கப்பல் போக்குவரத்தை மீண்டும் தொடங்க இலங்கை அரசு யோசனை தெரிவித்தது. அதன் அடிப்படையில் பூர்வாங் கப் பணிகளும் தொடங்கின. கப்பல் போக்குவரத்து விரைவில் தொடங்கும் என்றுகூட அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், கொழும்பு - தூத்துக்குடி கப்பல் போக்கு வரத்துக்கு தமிழகத்தில் எதிர்ப்புக் கிளம்பியது.

இந்தத் திட்டத்தால் சேது சமுத்திரத் திட்டப்பணிகள் பாதிக்கும் என்றுகூறி, அரசியல் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித் தன. இதனால், இலங்கை அரசு இந்தத் திட்டத்தை ரத்துச் செய்துவிட்டது. தற்போது கொழும்புக்கான பயணிகள் கப்பல் போக்குவரத்து கேரளாவுக்குச் சென்றுவிட்டது.

கேரளமாநிலத் தலைநகர் திருவனந்தபுரம் அருகே உள்ள விழிஞம் துறைமுகத்திலிருந்தும் கொழும்புக்கு பயணிகள் கப்பல் சேவை நடைபெறவுள்ளது. இதற்கான அனுமதியை கொழும்பைச்சேர்ந்த கோல்டன் குரூய்ஸ் லைன் என்ற நிறுவ னம் பெற்றுள்ளது.

வரும் மார்ச் மாதம் 1 ஆம் திகதி முதல் இந்தக் கப் பல் சேவை தொடங்குகிறது. முழுவதும் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட கப்பல் இயக்கப்படவுள்ளது. ஒரு மணி நேரத் துக்கு 40 கடல் மைல் வேகத்தில் இந்தக் கப்பல் பயணிக்கும்.

இதனால், திருவனந்தபுரம் - கொழும்பு பயணநேரம் 5 மணி நேரத்திற்கும் குறைவாகவே இருக்கும் என்று தெரிவிக் கப்படுகிறது.

தமிழகத்துக்குக் கிடைத்தவாய்ப்பு கேரளாவுக்கு போயுள்ள தால், தமிழகத்தின் சுற்றுலா வளர்ச்சி பாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

விசா கட்டுப்பாடுகளையும் தளர்த்துவதாக இலங்கை அரசு உறுதியளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# யாழ்.மத்திய கல்லூரியில் முறைசாராக் கல்விப் பயிற்சி

யாழ்.மத்திய கல்லூரியின் யாழ்ப்பாண கல்வித்திணைக்கள முறைசாராக்கல்விப் பிரிவால் நடாத்தப்படும், கணினி பயிற்சித் திட்டத்தின் கீழான கணினி , கணினித் தட்டெழுத்து, வீட்டு மின்னிணைப்பு வெளியிணைப்பு இயந்திர திருத்தம், வாகன சாரதிப்பயிற்சி, வெளிநாடு செல்பவருக்கான ஆங்கிலப் பயிற்சி ஆகிய ஆறு பாடநெறிகளின் 2004 ஆம் ஆண்டிற்கான பயிற்சி நெறிகள் - எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

தேசிய பாடசாலையின் முறைசாராக் கல்விப் பயிற்சித் திட்டத்தின் கீழ் நடைபெறும் ஒவ்வொரு பயிற்சித் திட்டத் திற்கும் 50 மாணவர்கள் மட்டும் சேர்த்துக்கொள்ளப்பட வுள்ளனர். பாடசாலையைவிட்டு வெளியேறிய சகல வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாரும் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான விண்ணப்பப்படிவத்தினை, இன்றுதொடக்கம் கல்லூரி அலுவலகத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். 16.02.2004 காலை 10 மணிக்கு பயிற்சிநெறி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. யாழ்ப் பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சகலரும் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம் எனக் கல்லூரி அதிபர் இராஜதுரை தெரிவித்துள்ளார்.

# சமாதான முயற்சியை முன்னெடுக்க சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்

## விசேட தூதுவர் யசுஷி அகாஷி தெரிவிப்பு

(ரோக்கியோ)

இலங்கையின் சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன் னெடுத்துச் செல்வதற்கு, சர்வதேசசமூகம் தமது ஆதரவினை வழங்கவேண்டும். இவ்வாறு அவர்கள் தமது ஆதரவினை வழங்கினாலும், இலங்கையின் தற்போதுள்ள அரசியல் நெருக் கடியில் சமாதானம் உடனடியாக ஏற்பட்டுவிடமாட்டாது.

இவ்வாறு ஜப்பானின் விசேட தூதுவர் யசுஷி அகாஷி நேற்று முன்தினம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்த தாவது,

இலங்கையிலுள்ள அரசியல் யாப்பில் மாற்றங்களைச் செய்து, சமாதான முயற்சிகளுக்கு தீர்வைக் காண்பதற்கு மூன்று, நான்கு வருடங்களோ அல்லது ஐந்தோ அதற்கு மேற்பட்ட வருடங்களோ எடுக்கலாம். ஆனால், சமாதான முயற்சிகளில் நாம் எமது உற்சாகத்தை இழக்கக்கூடாது.

ஆசியாவில் உள்ள நாடுகளில் சமாதானத் தையும்,பாதுகாப்பையும் ஏற்படுத்தாவிட்டால் - ஜப்பானிலும், சமாதானம்,பாதுகாப்புவராது எனவும் அகாஷி மேலும் தெரிவித் தார்.

# பொலிஸ்மா அதிபரின் சேவைக்காலத்தை நீடிக்க அரசியலமைப்பு சபைக்கு ஆலோசனை

பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வாவின் சேவைக்கா லத்தை - ஆறு மாதங்கள் நீடிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசியலமைப்பு சபைக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அடுத்த மாதம் 19 ஆம் திகதியுடன் பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வாவுக்கு 60 வயது பூர்த்தியாவதை ஒட்டியே, ஜனாதிபதி இந்த யோசனையை அரசியலமைப்புச் சபைக்குத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் ஆலோச்னைக் கடிதம் - அரசியல் அமைப்பு சபைக்கு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

எதிர்வரும் 13ம் திகதி கூடவிருக்கும் அரசியலமைப்புச் சபைக்கூட்டத்தில் இதுபற்றி தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூகநோக்கு

- நிதி -

# வாழ்வியலுக்கான மக்கள் போராட்டத்திற்கு மதிப்பளிப்பார்களா?



யாழ். குடாநாட்டில் 14 வருடங்களுக்கு மேலாக வாழ்விடங்களை இழந்து அவல வாழ்வு வாழ்ந்துவந்த மக்களின் உணர்வலைகள், இலங்கையில் 56 ஆவது சுதந்திரதினத்தில் வெளிக்கிளர்ந்துள்ளது. தென்பகுதியில் கோலாகலங்களும், கொண்டாட்டங்களும் நடந்தன. வட - கிழக்கில் மக்களின் அவல வாழ்வு தொடர்கிறது. "எங்கள் வாழ்விடங்களுக்கு எங்களைப் போகவிடு" என்ற கருப்பொருளில் அமைந்த இந்த அகிம்சைப் போராட்டம்- சிங்கள ஆட்சியாளர்களுக்கு மட்டுமல்ல, சில வேடம் பூண்டுள்ள இராணுவ அதிகாரிகளின் முகத்தையும் வெளியுலகுக்குக் கொண்டு வரும்.

தென்மராட்சியிலும், வலி.வடக்கிலும் ஒரே நாளில் ஆரம்பமாகியிருக்கும் இந்தப் போராட்டம் - மறுக்கப்பட்ட வாழ்வியல் அடிப்படைகளுக்கான போராட்டம் என்பதனை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் றுவான் சந்திரசேகர ஏற்றுக் கொண்டுள்ளார். அதே நேரம், மக்கள் தமது அகதிவாழ்வில் ஏற்பட்ட தாங்கமுடியாத வேதனைகளாலும, சுமைகளாலும் வெகுஜனப் போராட்டத்திற்குள் தள்ளப்பட்டுள்ளனர். இது வெற்றியளிக்கும் என்று கூறியுள்ளார் அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலய அதிகாரி.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சக்திக்குட்பட்ட விதத்தில் தம்மால் மீளக்குடியமர்வுக்கு எதனையும் செய்யமுடியாது என்று ஆகிவிட்டது. அதேபோல், அரச அதிகாரிகளும் 'பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்' என்பதாக அவர்களது நடத்தைகள் அமைந்துள்ளன.

எனவேதான், இது மக்கள் பிரச்சினை. மக்களே தீர்வுகாணவேண்டும் என்று மக்கள் சக்தியை ஒன்றுதிரட்டி போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.




இலங்கை இராணுவத்தினரின் சேம நலன்களைக் கவனிப்பதற்காகவும், அவர்களைப் பாதுகாப்பதற்காகவும் தமிழ்மக்களின் சொத்துக்கள் வளங்கள், உடமைகள் ஆக்கிரமிக்கப்பட்டு, உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் யாழ். குடாநாட்டில் 14 வளம் நிறைந்த பிரதேசங்கள் மக்கள் மீளக் குடியமர்வுக்கு மறுக்கப்பட்டுள்ளது. அவற்றில் சுமார் 30 ஆயிரத்து 400 குடும்பங்கள் வீடற்றோராக்கப்பட்டுள்ளனர்.

வலி.வடக்கிலும், தென்மராட்சியிலும் பொதுமக்கள் மேற்கொண்டு வரும் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு - அரசபடைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் அச்சுறுத்தல்கள், படைகளின் மனிதப் பண்பை அம்பலப்படுத்துகின்றது.

விடுதலைப் புலிகளுடன் அரசபடைகள் யுத்தம் செய்த காலப்பகுதியில், தமிழர்கள் மீதான கெடுபிடிகளையும், வகை தொகையற்ற இன அழிப்புக்களையும் மேற்கொண்டன. ஆனால், இன்று புலிகளுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டுள்ள போதிலும், அப்பாவித் தமிழ் மக்களை 'மாற்றாந் தாய் மனப்பான்மையுடன்' நோக்கும் விதமானது - தமிழர்களுக்கு ஒரு தனிநாடு அமைவதன் முக்கியத்துவத்தையே வெளிக் காட்டுகிறது. சர்வதேசம் இன்று நன்கு விளங்கிக் கொண்டுள்ளது. இலங்கையில் தமிழ்மக்களுக்கு மறுக்கப்பட்டுவந்த உரிமைகளை, மீட்டெடுக்க வேறுவழியின்றியே ஆயுதப்போராட்டத்தில் ஈடுபடவேண்டியதாயிற்று. ஆனாலும், உலக அரசியல் மாற்றங்களுக்கும், சர்வதேச ரீதியான வேண்டுகோள்களுக்குமாகவே இன்று தமிழர்தரப்பு தாமாகவே சமாதான சூழலுக்கான வழிவகைகளை முன்மாதிரியாக மேற்கொண்டுவருகிறது. இதனை இலங்கையில் உள்ள அரச இயந்திரமும், ஆயுதப்படைகளும் கொச்சைப்படுத்துமாயின், அது தமிழர் தரப்பை சீற்றமடையவும், பொறுமையிழக்கவுமே செய்யும்.

'எமது இடத்தில் எம்மை வாழ விடுங்கள்' உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் ஆக்கிரமித்துள்ள எமது பூர்வீகக் குடிநிலங்களை விட்டகலுங்கள் என்றே யாழ்.குடாநாட்டு மக்கள் அகிம்சைப் போராட்டத்தில் இறங்கியுள்ளார்கள். ஆகவே, இதற்குக் கிடைக்கப் போகும் தீர்வு இந்த இலங்கை நாட்டின் ஒட்டுமொத்தமான சமாதானத்திற்கு கணிசமான பங்களிப்பை ஆற்றக்கூடியது. மாறாக வழமையான பாணியில் அரசபடைகள் - மக்கள் போராட்டத்தைக் கொச்சைப்படுத்த முற்பட்டால், இலங்கையில் சமாதான முயற்சிகள் நிச்சயமாகக் கேள்விக்கிடமாகவே மாறும் என்பதுதான் யாழ். குடாநாட்டு மக்களின் மன வெளிப்பாடாகும்.

**இந்தப் போராட்டம் மறுக்கப்பட்ட வாழ்வியல் அடிப்படைகளுக்கான போராட்டம் என்பதனை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் றுவான் சந்திரசேகர ஏற்றுக்கொண்டுள்ளார். அதேநேரம் மக்கள் தமது அகதி வாழ்வில் ஏற்பட்ட தாங்கமுடியாத வேதனைகளாலும், சுமைகளாலும் வெகுஜனப் போராட்டத்திற்குள் தள்ளப்பட்டுள்ளனர்.**

**இது வெற்றியளிக்கும் என்று கூறியுள்ளார் அகதிகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகராலய அதிகாரி.**

---

செய்திக் கட்டுரை

- சுதந்திரதீபன் -

# பல்கலைக்கழகம் யாருக்காக?

ஒரு பல்கலைக்கழகம் யாருக்காக இயங்குகின்றது. அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்காகவா? கற்பிக்கும் ஆசிரியர்களுக்காகவா? அல்லது அங்கு கற்கும் மாணவர்களுக்காகவா?



யாழ்.பல்கலைக்கழகத்தில் நடக்கும் தொடர் நிகழ்வுகளைப் பார்த்தால், அது ஊழியர்களுக்காகவேதான் இயங்குகிறது என்று படுகிறது. அல்லது குறைந்தபட்சம் அவர்கள் அவ்வாறு நினைத்துக்கொண்டு செயற்படுகிறார்கள்.

இதுவரையில் எத்தனை எத்தனை வேலை நிறுத்தங்களை இவர்கள் நடத்தியுள்ளார்கள். யாரின் நன்மைக்காக? ஒட்டுமொத்த சமூக நன்மைக்காகவா? தங்களுடைய அதிகப் பிரசங்கித்தனமான, அதாவது தாங்கள்தான் பல்கலைக்கழகச் செயற்பாடுகளின் அச்சாணி என்று மயங்கும் மடமையின் விளைவான செயற்பாடுகளிலிருந்து அவர்கள் விடுபடுதல் வேண்டும் அல்லது விடுவிக்கப்படல் வேண்டும். நியமனங்களில் நியாய, அநியாயம் வழிமுறை என்று இன்று உரக்கக்கூச்சலிடும் இவர்களில், எத்தனை பேர் கடந்த காலங்களில் அவ்வாறான முறைகளில் தத்தம் நியமனங்களைப் பெற்றனர். நெஞ்சில் கையை வைதத்துக் கூறுவார்களா? தொடர்ச்சியான போர்சூழலால் குடாநாட்டு மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்தது. கல்விச் செயற்பாடுகள் அடிக்கடி தடைப்பட்டன எனபது இதுவரைகால யதார்த்தம். இப்போது பேருக்காயினும் சமாதானம் நிலவுகின்றது. இந்தச் சூழலிலாவது எமது மாணவர்களைப் படிக்கவிடாது, ஏதேதோ நொண்டிக் காரணங்களைக்கூறி பல்கலைக்கழகச் செயற்பாடுகளைக் குழப்பும் இவர்களின் உள் நோக்கம்தான் என்ன? குடாநாட்டுக் கல்வியைச் சீரழிக்கக் கங்கணங்கட்டிச் செயற்படும் திரை மறைவுப் பேர்வழிகளின் களமுகவர்களாக, கைக்கூலிகளாக இவர்கள் இயங்குகிறார்களா என்ற சந்தேகம் யாழ்.சமூகத்தில் எழுந்துள்ளது. இதில் உண்மையில்லை என எவரும் மறுக்க இயலுமா?

சமகாலத்தில் பல்கலைக்கழகத் தேர்வு பெற்றவர்களை எடுத்துப் பார்த்தால், யாழ்.பல்கலைககழக மாணவர்கள் - ஏனைய பல்கலைக் கழகங்களில் பயிலும் தம் சகாக்களைவிட ஓராண்டாவது பின்தங்கி நிற்பதுதெரியும். இதற்கு யார் காரணம்?

யாழ்.சமூகத்தின் ஏனைய தரப்பினரோடு ஒப்பிடுகையில் - பல்கலைக்கழக ஊழியர்களின் வேதனம், சலுகைகள் போன்றவை மிக அதிகம் என்பது யாவரும் அறிந்ததே. இவற்றோடுகூட திருப்தியடையாது இன்னுமின்னும் கேட்பதும், தொழிற்சங்க நடவடிக்கைகளைத் துஷ்பிரயோகம் செய்வதும் சரிதானா என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

கடமை முதலில் - உரிமை பிறகு. நீங்கள் இந்தச் சமூகத்தில் உறுப்பினர்கள். இதன் பொறுப்பு உங்களுக்கும் உண்டு. அதனை இப்படியான போராட்டங்களை நடத்துவதை விட்டு, உங்கள் கடமைகளைச் சரிவர ஆற்றுவதன்மூலம் நிரூபியுங்கள். சமூகம் உங்களுக்கு ஆதரவளிக்கும்.

அதை விட்டுவிட்டு, எப்போதும் ஒழுங்காக சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு, சம்பளத் திகதி கழிந்ததும் போராட்டங்களை அரங்கேற்றுவது என்ன நியாயம்? உங்களுக்கும் பிள்ளை குட்டிகள் உண்டு. உங்கள் சம்பளம் உங்களுக்கே சுவறவேண்டுமே?

ஊழியர்களின் நிலைப்பாடுகள் ஒரு புறமிருக்க, ஒவ்வொரு தடவையும் யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தினரின் கையாலாகாத்தனம் நிரூபணமாகிறதே? இதை யாரிடம் சொல்லியழுவது?

இன்னொரு வருந்தத்தக்க விடயம் என்னவென்றால் - கல்வியின் மேம்பாட்டைக் கவனிக்கவென்றிருப்போரும் இந்த விடயத்தில் அசட்டையாக இருப்பதுபோலத் தெரிவதுதான். அவர்கள் இதில் தலையிட்டு நியாய அநியாயங்களை அறிந்து, அநியாயங்கள் இருப்பின், அவற்றை நிவர்த்திசெய்து பல்கலைக்கழக செயற்பாடுகளைத் தடங்கலின்றி நிறைவுபெற உதவவேண்டும்.

எமது மண்ணின் தேவை - எமது மாணவர்களின் கல்வி - எந்தக் காரணம் கொண்டும் இவ்வாறு முடக்கப்படுவதை எந்தக் கட்டத்திலும் அனுமதிக்கலாகாது. ☆

**எத்தனை வேலைநிறுத்தங்களை இவர்கள் நடத்தியுள்ளார்கள். யாரின் நன்மைக்காக? ஒட்டுமொத்த சமூக நன்மைக்காகவா தங்களுடைய அதிகப் பிரசங்கித்தனமான அதாவது தாங்கள்தான் பல்கலைக்கழக செயற்பாடுகளின் அச்சாணி என்று மயங்கும் மடமையின் விளைவான செயற்பாடுகளிலிருந்து அவர்கள் விடுபடுதல் வேண்டும் அல்லது விடுவிக்கப் படல் வேண்டும்.**

# ரஷ்ய தலைநகரான மொஸ்கோவில் சுரங்க ரயிலில் தற்கொலைத் தாக்குதல்!

## 39 பயணிகள் பலி! 100 இற்கு மேற்பட்டோர் படுகாயம்!!

(மொஸ்கோ)

ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் சுரங்கரயிலில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 39 பயணிகள் மரணமடைந்துள்ளதாகவும், 100 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாகவும் இன்ரபாக்ஷ் என்னும் செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

உலக நோக்கு

சுரங்கப்பாதை முழுவதும் புகைமண்டலமாகக் காட்சியளித்ததாகவும் மீட்புப் பணியாளர்கள் - பயணிகளைச் சுரங்கத்திலிருந்து உடன் வெளியேற்றியுள்ளதாகவும் மேலும் அச்செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

இக்குண்டுத்தாக்குதலுக்கு தற்கொலைக் குண்டுதாரிகளே காரணமென நிரூபிக்கப்பட்டால் - செச்சினியத்தீவிரவாதிகள் காரணமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

பலர் எலும்பு முறிவு, தீக்காயங்கள், நச்சுபுகையினைச் சுவாசித்ததனால் ஏற்பட்ட பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக ரஷ்ய வானொலி தெரிவித்தது.

பாரிய குண்டு வெடிப்பினால் திகிலடைந்த மக்கள் சிதறி ஓடியதாக பி.பி.சியின் செய்தியாளர் தெரிவித்தார். தீச்சுவாலையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு இரத்தக்காயங்களுடன் பாதைவழியே பயணிகள் ஓடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

செச்சினிய தீவிரவாதிகள் முன்னரும் ரஷ்யாவின் தலைநகரில் பல்வேறு குண்டுத்தாக்குதல்களை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# சீன புத்தாண்டு வைபவத்தில் 40 பேர் நெரிசலில் பலியாகினர்!



(பீஜிங்)

சீனாவின் சந்திர நாட்காட்டியின்படி லூனார் ஆண்டு கடந்த 22 ஆம் திகதி தொடங்கியது. இந்த ஆண்டை குரங்கு ஆண்டாகவும், சீனா, ஜப்பான், தாய்லாந்து நாட்டவர்கள் கொண்டாடுகின்றனர்.

லூனார் புத்தாண்டுக் கொண்டாட்டங்களையொட்டி, சீனாவின் பல்வேறு நகரங்களில் - கலை நிகழ்ச்சிகள், பேரணிகள், சாகச நிகழ்ச்சிகளும் நடைபெற்றுவந்தன.

இந்தப் புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் இறுதி நிகழ்ச்சியாக விளக்குத் திருவிழா நேற்றுமுன்தினம் பீஜிங் நகரம் உட்பட பல்வேறு பகுதிகளில் நடைபெற்றது.

வண்ண வண்ண அலங்கார விளக்குகளின் கண்காட்சி மற்றும் சாகச நிகழ்ச்சிகளும் பீஜிங் அருகே உள்ள மியூன் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. இதைப் பார்க்க ஆயிரக்கணக்கான சீனர்கள் அந்தப் பகுதியில் திரண்டனர்.

ஹஜ் பயணத்தின்போது மினா நகரில் ஒரு பாலத்தின்மீது சென்றபோது நெரிசல் ஏற்பட்டதுபோல இந்த விளக்குத் திருவிழாவிலும் ஏராளமான பயணிகள் அங்குள்ள ஒரு குறுகலான பாலத்தின்மீது சென்றபோது நெரிசல் ஏற்பட்டது.

நெரிசலில் சிக்கிய ஒருவர் கீழே விழுந்ததைத்தொடர்ந்து பரபரப்பு ஏற்பட்டு நெரிசல் இன்னும் அதிகமாக, ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு ஓடினார்கள். இதில் கீழே விழுந்தவர்கள் மீது மற்றவர்கள் மிதித்து ஏறி ஓடினார்கள்.

இந்த நெரிசலில் சிக்கி மிதிபட்டும், மூச்சுத்திணறியும் 40 பேர் பலியானார்கள். 50 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் 15 பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது. காயமடைந்தவர்களுக்கு சிறப்புச் சிகிச்சையளிக்கும்படி சீன அதிபர் ஹுஜின்டாவோ உத்தரவிட்டிருக்கின்றார். இந்த விபத்தைத்தொடர்ந்து மற்ற நாடுகளில் நடக்கும் விளக்குத் திருவிழா நிகழ்ச்சிகள் உடனடியாக ரத்துச்செய்யப்பட்டன.

# கடற்சிப்பிகள் சேகரித்த 14 சீனர்கள் பிரிட்டனில் அலை அடித்து மரணம்!



பிரித்தானியாவில் அமைந்துள்ள மொறிகம்பி குடாவில் கிணிஞ்சர் எனப்படும் உணவிற்குப் பயன்படும் ஒருவகை சிற்பிகள் சேகரிக்கும் பணியில் ஈடுபட்ட 14 பொதுமக்கள் திடீரென ஏற்பட்ட கடல் அலை உயர்ச்சியினால் அள்ளிச்செல்லப்பட்டு நீரில்மூழ்கி மரணமானார்கள்.

மரணமடைந்தவர்கள் சீனர்கள் எனவும், ஆங்கிலமொழியினைப் பேசமுடியாதவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கிணிஞ்சர் சேகரிப்பில் ஈடுபட்டிருந்த வேறு இருவர் நீரிலிருந்து உயிருடன் வெளியேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று நடைபெற்றது.

கடலோரக் காவற்படை, வான்படை ஆகியன தேடுதல் முயற்சியில் ஈடுபட்டுவருவதாகவும், கரையோரங்களில் மோப்ப நாய்களின் உதவியுடன் தேடுதல் நடத்தப்பட்டுவருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பிரதேசத்தின் சூழல் தொடர்பாக எவ்வித அறிவுமற்றவர்கள் ஆபத்தில் சிக்க நேரிடும் என பி.பி.ஸியின் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் அந்தப் பிரதேசத்தின் நாடாளுமன்ற அங்கத்தவர்கள் கிணிஞ்சர்களை வர்த்தகரீதியாகப் பயன்படுத்தும் அமைப்புக்களுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

இது தொடர்பாக நாடாளுமன்ற அங்கத்தவர் ஒருவர் தெரிவிக்கும்போது -

மொறிகம்பி என அழைக்கப்படும் அந்தப் பிரதேசத்தில் காணப்படும் கிணிஞ்சர்களின் பெறுமானம் மில்லியன் பவுண் பெறுமதி மிக்கதெனவும், இதனால் இவற்றைச் சேகரிப்பவர்கள் உயிராபத்தைப் பொருட்படுத்தாது அவற்றை சேகரிப்பதில் ஆர்வம்காட்டிவருவதாகவும் தெரிவித்தார்.

# பிரிட்டனின் ஆயுதத் தலைவர் இந்திய சிறையிலிருந்து விடுதலை

பிரித்தானியாவின் ஆயுதத்தரகர் பீற்றர் பிளீச் - இந்திய சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டு பிரித்தானியாவிற்குப் பயணமானார். 52 வயதுடைய பீற்றர் பிளீச் இந்திய நாடடின் எல்லைப் பிரதேசத்திற்குள் 1995 ஆம் ஆண்டு ஆயுதங்களை பரசூட்டின் மூலம் இறக்குவதற்கு முற்பட்டவேளையில் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இதனிடையே சென்ற சில காலமாக இவரின் விடுதலை தொடர்பாக பிரித்தானிய அரசு இந்தியாவிடம் வேண்டுகோள் விடுத்தது. ஆனால், இந்திய அரசு மறுப்புத் தெரிவித்தது.

ஆனால், பிரித்தானியாவின் உள்நாட்டமைச்சர் டேவிட் பிலங்கெற் - இந்தியாவிற்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்தவேளையில் பீற்றர் பிளீச்சின் விடுதலை தொடர்பாக இந்தியப் உதவிப்பிரதமர் அத்வானியுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருந்தார்.

இதன்பின்னர் இந்தியப் பிரதமரினால் மன்னிப்பளிக்கப்பட்டு சென்ற வெள்ளிக்கிழமை



இவர் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

விடுதலையின்பின் கல்கத்தாவிலிருந்து விமானத்தில் பிரித்தானிய அதிகாரிகளுடன் இவர் பயணமானார். பிரித்தானியாவிற்கு சென்றதும், தனது சுயசரிதையை எழுதும் பணியில் ஈடுபடப்போவதாகவும் அவர் தெரிவித்தார். 1995 ஆம் ஆண்டு இவர் இந்த ஆயுதங்களை இந்தியாவிற்குள் ஏன் கடத்தினார் என்பது இதுவரை அறியப்படவில்லை.

அணுசக்தி திட்டம் தொடர்பாக

# ஐ.நா.வின் அணுசக்தி அமைப்பிற்கு பாகிஸ்தான் ஒத்துழைப்பு வழங்கும்

## ஜனாதிபதி முஷாரப் தெரிவிப்பு





(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானிலிருந்து அணு ஆயுத இரகசியங்களை சீனா, லிபியா ஆகிய நாடுகளுக்கு விற்றது தொடர்பாக அணு விஞ்ஞானி அப்துல் குடீர் கானுக்கு தண்டனை வழங்கப்பட்டிருந்தது. இவருக்கு மன்னிப்பளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போது -

ஐக்கிய நாடுகளின் சர்வதேச அணுசக்தி அமைப்பு - பாகிஸ்தானின் அணுசக்தி திட்டம் தொடர்பான ஆவணங்கள் எல்லாவற்றையும் பெறமுடியாதெனவும், ஆனால் இது தொடர்பாகப் பாகிஸ்தான் ஒத்துழைப்பு வழங்குவதற்குத் தயாராகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேநேரத்தில் வொஷிங்டனின் மத்திய புலனாய்வுத்துறையின் தலைவர் ஜோர்ஜ் ரெனற் தெரிவிக்கும்போது -

பல ஆண்டுகளாக அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகளில் புலனாய்வுப்பிரிவினர் டாக்டர் கானின் செயற்பாடுகளை அவதானித்து வந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இதனிடையே, பாகிஸ்தானின் வெளிநாட்டமைச்சர் தெரிவித்த கருத்தில், பாகிஸ்தான் அணு ஆயுதத் திட்டங்களை மிகவும் நிதானமாகவே செயற்படுத்திவருவதாகவும், இதனால் அவ்வகையான திட்டங்களை பரிசோதிப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது எனத் தெரிவித்தார்.

டாக்டர் கான் - ஈரான், லிபியா ஆகிய நாடுகளின் அணு ஆயுதத் திட்டம் தொடர்பான விசாரணைகளின்போது தெரிவித்த கருத்துக்களை சர்வதேச அணுசக்தி அமைப்பிற்கு வழங்குவதற்குத் தயாராக உள்ளதாகவும் பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# ஈராக்கில் சேகரிக்கப்பட்ட தகவல்கள் சரியானதே!

## அமெரிக்க புலனாய்வுத் தலைவர் தெரிவிப்பு

அமெரிக்க புலனாய்வுத்துறையின் தலைவர் ஜோர்ச் ரெனெற் தமது அமைப்பினால் ஈராக்கில் சேகரிக்கப்பட்ட தகவல்கள் சரியானதென வாதிட்டார். புலனாய்வுத்துறையின் தகவல்களில் ஈராக்கிய அதிபர் சதாமினால் உடன ஆபத்து ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்படவில்லை. ஆனால், சதாமினால் வருங்காலத்தில் ஆபத்து நேரிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது எனக் குறிப்பட்டார்.

ஈராக்கில் தொடர்ந்தும் தேடுதல் நடத்தப்படவேண்டும் எனவும், ஜனாதிபதி புஷ்ஷினால் நியமிக்கப்பட்டுள்ள சுதந்திரமான ஆணைக்குழுவினை ஆதரிப்பதாகவும் ரெனற் தெரிவித்தார். மேலும் புலனாய்வுத்துறைத் தகவல் - முற்றாகச் சரியாகவோ அல்லது முற்றாகத் தவறானதென்றோ கருதமுடியாதெனவும் தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி புஷ் நேர்மையான அபிப்பிராயத்தையே புலனாய்வுத்துறையினரிடமிருந்து எதிர்பார்த்ததாகவும் தெரிவித்தார்.

இதனால், மக்களும், அரசியல்வாதிகளும் - ஈராக்கில் தொடர்ந்து தேடுதல் நடத்துவதற்கு கால அவகாசத்தை வழங்கவேண்டும் எனவும், ஈராக்கின் முன்னாள் பரிசோதகர் டேவிட் கே முற்றாகப் பரிசோதனை நடத்தியுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்ள அவர் மறுத்திருந்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அரசியல் குழப்பநிலை ஏற்பட்டுள்ள நிலையில் உண்ணாவிரதம் நடத்துவதில் பயனில்லை!

## கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம்

உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை குடியமர அனுமதிக்குமாறு கோரி, மீண்டும் ஓர் போராட்டம் இடம்பெறுமானால் நாமும் அதில் கலந்துகொள்வோமென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வலி.வடக்கு பிரதேச செயலகம் முன்னால் இடம்பெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக நேற்று நடத்தப்பட்ட பொதுக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், இடம்பெயர் அவல வாழ்வால் தமிழ் மக்கள் அனுபவிக்கும் துன்பதுயரங்களை நன்கு அறிவோம். ஏனெனில், நாமும் இந்த மாவட்டத்தில் வசித்தவர்கள். உங்களுடன் இணைந்து சகல இடப்பெயர்வுகள், துன்பங்கள் முதலானவற்றை அனுபவித்தவர்கள். எனினும் தற்போதிருக்கும் அரசியல் குழப்பகரமான சூழ்நிலையில் நாம் எந்தப் போராட்டத்தை மேற்கொண்டாலும் அது பயனற்றதாகிவிடக்கூடிய நிலையுள்ளது.

நாடாளுமன்றம் இன்றோ நாளையோ கலைக்கப்படலாம் என்ற நிலையில் யார் நாட்டில் ஆட்சி செலுத்துகின்றனா என்பது தெரியாதுள்ளது. அப்படியிருக்கும்போது நமது உரிமைப் போராட்டத்துக்கு சரியான தீர்வு கிடைக்காமல் போய்விடக்கூடிய நிலையுள்ளது. இதனால் இந்தப் போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்திக்கொள்வதே நல்லது.

இதனையே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான நானும் ரவிராஜும் மற்றும் மாவை சேனாதிராஜா ஆகியோரும் வலியுறுத்துகின்றோம்.

மீண்டும் ஓர் உறுதியான அரசாங்கம் ஆட்சிக்கு வந்து அதன்பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி, எமது பகுதிகளில் உயர்பாதுகாப்பு வலயம் தொடர்ந்தும் இருக்குமானால், நாமும் உங்களுடன் சேர்ந்தே இந்தப் போராட்டத்தை முன்னெடுப்போம்.

நாம் வெறுமனே வாய்ப்பேச்சுக்கான இந்த உறுதிமொழியை அளிக்கவில்லை. நமது மக்களின உள்ளத்துணர்வுகளை புரிந்துகொண்டே இதனைச் செய்கிறோம் என்றார்.

அங்கு உரையாற்றிய ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா மற்றும் ரவி ராஜ் ஆகியோரும் இந்தக் கருத்தை வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

## சம்மேளனத் தலைவருடன் வேலைநிறுத்தம் குறித்து பேச்சு நடத்த துணைவேந்தர் மோகனதாஸ் மறுப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்பல்கலைக்கழக ஊழியர்கள் மேற்கொண்டுவரும் வேலைநிறுத்தம் போராட்டம் தொடர்பாக பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளன தலைவர் லயனல் மல்வத்தகே மற்றும் செயலாளர் சுப்பையா ஆகியோரை சந்திப்பதற்கு துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் மறுத்துள்ளார்.

வேலைநிறுத்தம் குறித்து லயனல்மல்வத்தகே தலைமையில் பல்கலைக்கழக வளாகத்தில் நேற்றுக்காலை கூட்டம் இடம்பெற்றது. இதில் அனைத்து ஊழியர்களும் பங்குபற்றினர். இதனையடுத்து பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது. இந்தச்சந்திப்பில்,

இந்தப்போராட்டம் ஊழியர்களின் நியாயமான தொழிற்சங்க போராட்டம் இது குறித்து எவரும் கருத்துக் கூறமுடியும். ஆனால் போராட்டத்தை கைவிடுமாறு கோர முடியாது. பல்கலையில் அரசியல்நடத்துவதை நாம் அனுமதிக்கப்போவதில்லை. சுற்றறிக்கைகளுக்கு முரணாக எவரும் செயற்பட முடியாது. உடனடியாக பின்வருவன நடைமுறைப்படுத்தப்பட்டால் வேலைநிறுத்தம் கைவிடப்படும்

சுற்றறிக்கைக்கு முரணாக நியமிக்கப்பட்ட எழுநர் பதவி இரத்துச் செய்தல்,

தலைமைபாதுகாப்பு ஊழியர் மீண்டும்இணைக்கப்படல் வேண்டும்,

கடந்த 7,8ஆம் திகதிகளில் வேலைநிறுத்தத்தில் பங்கு பற்றியோருக்குரிய படி உடனடியாக வழங்கல் ஆகியவனவற்றை நடைமுறைப் படுத்தவேண்டும்எனவும் கோரிக்கைவிடுத்துள்ளார். வேலைநிறுத்தப் போராட்டம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு எதிராக பல மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

### புதிய கூட்டணியை...

ஜெயந்த பொதுச்செயலாளராகவும் நியமிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது

புதிய கூட்டணியின் பதிவுகளுக்கான ஆவணங்களை பெற்றுக்கொண்ட தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க, கூட்டணிக்கான அங்கீகாரத்தை அடுத்தவாரம் வழங்குவாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

### மேஜர் ஜெனரல்...

இந்த விஜயத்தின்போது கிழக்குப் பிராந்திய இராணுவ அதிகாரிகளையும், விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

10 ஆம் திகதி மட்டக்களப்புக்கும், 11 ஆம் திகதி அம்பாறைக்கும் செல்லும் இவர் கண்காணிப்புக்குழுவின் கடமைகளை சிறப்பாக மேற்கொள்வது பற்றி இராணுவ அதிகாரிகளோடும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளோடும் கலந்துரையாடுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மருதானையில் ஒருவர் பலி

கொழும்பு மருதானையில் டார்ளி வீதியில் நேற்றுமுற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், மூவர் காயமடைந்தனர். நேற்று முற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே இவர் மீது துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதாக மருதானைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். வானொன்றில் வந்த இனம்தெரியாத கோஷ்டியே இந்தத் துப்பாக்கிச் சூட்டினை மேற்கொண்டதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தோடு தொடர்புடையவர்கள் கொழும்பு மகசீன் வீதியூடாகத் தப்பிச்சென்றபோது, ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப்பிரயோகம் செய்துள்ளனர். நேற்று முற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஒருவர் உயிர் இழந்ததுடன் மூவர் காயமடைந்தனர்.

### சுதந்திரக் கட்சி...

திரக்கட்சியினரின் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டதையடுத்து- அடுத்துவரும் நாட்களில் எந்நேரத்திலும் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

### கண்காணிப்...

சுமார் ஒருமணிநேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், படையினரும் - புலிகளும் யுத்தநிறுத்த மீறல்கள் குறித்தும் அதனைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### ஊழல்களை...

அரசாங்கமொன்று மாறுவதற்கு முன் ஆதரவு வழங்கக்கூடாதெனத் தெரிவித்தார்.

புதிய அரசாங்கம் அமைந்தவுடன் ஊழல்களில் ஈடுபட்ட அரச அதிகாரிகள் மற்றும் இது சம்பந்தமான ஆவணங்களை அப்புறப்படுத்த உதவியோருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அந்தந்த திணைக்களங்களில் இருந்து இந்த முக்கிய ஆவணங்களை அகற்ற உதவிய அரச அதிகாரிகளுக்கு எதிராகவும் அமைச்சுக்களின் செயலாள்களுக்கு எதிராகவும் புதிய அரசாங்கத்தின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா பொதுத் தேர்தலுக்கு தயாராகும் நிலையில், அவரது கட்சி சார்பாக மங்கள சமரவீரவினால் இவ்வாறானதொரு கடுமையான அறிக்கையொன்று வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### ஜேர்மன் இராஜாங்க செயலரை...

அரசாங்கத்துக்கும் - விடுதலைப் புலிகளுக்கம் இடையில் கடந்த 2002 ஆம் ஆண்டு செய்யப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையின் படி உள்ள விடயங்கள் எவையும் இதுவரை அரசாங்கத்தால் அமுல்படுத்தப்படவில்லை.

அத்துடன், வடக்கு - கிழக்கில் வாழும் மக்கள் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி தமக்கு உடனடியாகத் தேவைப்படும் உதவிகள் கிடைக்கும் என எதிர்பார்த்தார்கள்.

ஆனால் இன்றுவரை நலன்புரி நிலையங்களிலும், அகதி முகாம்களிலும் அவர்கள் வாழ்கின்றனர்.

போர் நிறுத்த உடன்படிக்கை மூலம் பொதுமக்களின் வீடுகள், பொது இடங்கள், பாடசாலைகள், வழிபாட்டுத்தலங்களிலிருந்து படையினர் விலகி இயல்பு வாழ்க்கையை உருவாக்குவது என இணக்கம் காணப்பட்டபோதும் அது இன்று வரை நடைபெறவில்லை.

இவ்வாறு ஜேர்மன் அதிகாரிகளுடனான சந்திப்பில் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்தார்.

### சமாதான முயற்சிகளிலிருந்து...

வருவதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் முற்றிலும் தவறானவையாகும்.

நாம் தற்போதும் வழமைபோலவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உட்பட அரசாங்கத்தலைவர்கள் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றோம். இவர்களுடனான தொடர்புகளை நாம் வெளிப்படையாகவே வைத்துள்ளோம்.

அத்துடன் சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கு தெற்கின் அரசியல் நெருக்கடி நிலை ஒரு முடிவுக்கு வரும்வரை நாம் காத்திருக்கின்றோம்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தனது முழுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதுவொரு மிகப்பெரிய பணி. கண்காணப்புக்குழு தனது பணியை மேற்கொள்வதற்கு இரு கட்சிகளும் தமது ஒத்துழைப்பை வழங்க கடமைப் பட்டுள்ளதால் இது சாத்தியமாகிறது.

கண்காணிப்புக்குழுவின் தற்போதைய தலைவரான ஜெனரல் புறூவ் ஹொவ்டேதான் இதற்கு சரியான நபராவார். கண்காணிப்புக்குழுவிற்கு சில வரையறைகள் இருந்தபோதும், அது தனது கடமையை சரிவரச் செய்துருகின்றது எனவும் சொல்ஹெய்ம தெரிவித்தார்.

### பிரதமரின் ஆலோசகர் தலையீடு...

ஒருவரும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இவர்களின் நிலை நேற்று மோசமடைந்த நிலையில் பிரதமரின் ஆலோசகரும் செயலாளருமான கலாநிதி அ.குணசிங்கம் - சாவகச்சேரி பிரதேச செயலகம்முன் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த வி.கந்தையாவை நேற்று பிற்பகல் மூன்று மணியளவில் சந்தித்து இந்தப் பிரச்சினை தொடர்பாக விரைவில் தீர்வு காணப்படவிருப்பதாக உறுதிமொழி வழங்கியதையடுத்து அவர் தனது போராட்டத்தை இடைநிறுத்திக்கொண்டார். இதற்கிடையில் வலி. வடக்குப்பிரதேச செயலகம் முன் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த 12 பேருடனும் தமிழ்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, என். ரவிராஜ், கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் அரசியல் குழப்பமான இந்த வேளையில் இந்தப் போராட்டத்தை நிறுத்துவதே சரியானதெனக் கூறியதையடுத்து அவர்களும் தமது போராட்டத்தை தற்காலிமாக இடைநிறுத்திக் கொள்வதாக அறிவித்தனர்.

தென்மராட்சியில் உண்ணாவிரதமிருந்தவருக்கு பிரதமரின் ஆலோசகர் பழச்சாறு வழங்கி போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

வலி.வடக்குப் பிரதேசத்தில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் பழச்சாறு வழங்கி போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவந்தார்.

இந்த நிகழ்வுகளில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப,தீ,29,25)

### இலங்கையைச் சேர்ந்த அறுவர் குழு...

அத்துடன், இவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் - குவைத்தில் உள்ள ஜப்ரியா நகரில் இலங்கையைச் சேர்ந்த மேலும் பலர் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இவர்களிடமிருந்து ஏ.கே.47 துப்பாக்கிகள், 9 மி.மீற்றர் பிஸ்ரல்கள், எம்.பி 5 துப்பாக்கிகள் என்பன கைப்பற்றப்பட்டன.

இந்த எம்.பி.5 ரகத் துப்பாக்கிகள் குவைத் நாட்டின் உள்துறை அமைச்சின் விசேட படையினரால் மட்டுமே பாவிக்கப்பட்டுவருகிறது.

இந்தத் துப்பாக்கிகள் உள்துறை அமைச்சின் விசேட படையினருடையதுதானா என்பதைக் கண்டறிய விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக, உள்துறை அமைச்சு எற்கனவே தமது எம்.பி 5 துப்பாக்கிகள் திருடர்களால் திருடப்பட்டோ, காணாமற் போயுள்ளதாகவோ முறைப்பாடு செய்துள்ளது.

எனவே, இவர்கள் மீதான இந்த விசாரணையில் உள்துறை அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகளும் அழைக்கப்படவுள்ளனர்.

அத்துடன், இந்தக் குழுவினரிடமிருந்து கையடக்கத் தொலைபேசிகளும், மீட்கப்பட்டிருப்பதாகவும், இந்தத் தொலைபேசிகளிலுள்ள பெயர், முகவரிகளைச் சேர்ந்த சந்தேக நபர்களும் விசாரணைக்கு அழைக்கப்படவுள்ளனர்.

இதேவேளை, அனுமதியில்லாமல் வேட்டைத் துப்பாக்கிகள் மற்றும் 138 ரவைகள் என்பனவற்றை வைத்திருந்த குவைத் நாட்டைச் சேர்ந்த ஒருவர் அந்த நாட்டுப் பொலிஸாரால், பொலிஸ் சோதனைச்சாவடியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

இவரும் இந்த இலங்கைக் குழுவினரின் கையடக்கத் தொலைபேசியிலுள்ள பெயர்களில் உள்ளவரெனத் தெரிவிக்கப்படுகிறது.

### மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1588 திகதி: 06.02.2004

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 0 | 3 | 5 | 4 | 2 | 9 | 3 |

யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறையின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறையினர் நடத்தும் யாழ்.மாவட்ட மகளிர் மட்டும் பங்குகொள்ளும் விளையாட்டு விழா ஆரம்பமாகின்றது.

ஆரம்பமாகும் நாள் – 9 ஆம் திகதியில்

(1) கிளித்தட்டு
(2) கரப்பந்தாட்டம்

10 ஆம் திகதியில்

மெய்வல்லுநர் நிகழ்ச்சியும் பரிசளிப்பு விழாவும்

இடம் :- யாழ்.பல்கலைக்கழக விளையாட்டரங்கு
நேரம் :- தாயக நேரப்படி 9 மணிமுதல் 6 மணிவரை

- பங்குகொள்ளும் வீராங்கனைகளுக்கான விசேட வாகன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. கோட்ட அரசியல்துறை மகளிரோடும், விளையாட்டு அதிகாரிகளோடும் தொடர்புகொள்ளவும்.
- 1 ஆம், 2 ஆம் இடங்களில் வெற்றிபெறுபவர்கள் தமிழீழத்தில் 8 மாவட்டத்தையும் சேர்த்து நடத்தப்படும் போட்டியில் பங்குகொள்வர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மகளிர் அரசியல்துறை,
யாழ்.மாவட்டம்.

விளம்பர அனுசரணை :-
தமிழீழ விளையாட்டுத்துறை,
யாழ்.மாவட்டம் (சி-2207)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.